ன் நெ' 15. விலை 2 அணு REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 12 | 1—11—53 | இதழ் 18

மன்னிக்க முடியாத குற்றம்

வெள்ளையன் இந்த
டை விட்டுப் போகக்
ாது. போனால் பெரிய
பத்து நேரிடும். வெள்ளையன்
சி நீடிக்க வேண்டுமென
ற்காகக் கடவுளைக்கூடப் பிரார்த்
கிறோம்''

*

மேற்படி தீர்மானம் ஒன்றை
றவேற்றி வைத்துக்கொண்ட
கட்சி, இந்நாட்டில், வெள்ளை
காலத்தில் இருந்ததாம் கூறு
ர் ஆச்சாரியார். ஆனால், அந்தக்
சியின் பெயர் என்ன? தலைவர்
ஆதரவாளர்கள் எத்தனைபேர்?
கட்சியின் தலைமைக் காரியாலயம்
இருந்தது? அதன் கொடி எப்
பட்டது? என்ற இது போன்ற
ங்களை ஆச்சாரியார் அருள்
க்கவில்லை. வெள்ளையனை விரட்
ப்பதில் மும்முரமாக ஈடுபட்டி
ஆச்சாரியாருக்கு ஒரு வேளை
படி விபரங்களைப்பற்றி ஒன்
ம் தெரியவில்லை போலும்!
ல், வெள்ளையன் வெளியேறிய
கண்டு வேதனையும் ஏமாற்ற
அடைந்த அந்தக் கட்சிக்காரர்
உடனே காங்கிரசுடன் நேச
இருப்பதாகக் காட்டிக் கொண்
ரம்! இந்த உண்மையை,
"பிரிட்டிஷார் இங்கிருந்த
ாது சிலர், இந்நாட்டில் பிரிட்
ஆட்சி நீடிக்க வேண்டுமென்
ம், அது வெளியேறினால்,
பத்தென்றும் கருதினர். கட
க்கூட அவர்கள் பிரார்த்
தனர். ஆனால், அவர்கள்
ற நேர்ந்தது. பின்னர்,

அன்பு விண்ணப்பம்

[அடிகள்]

★

அவர்கள் நிலைமையை உணர்ந்து, நம்மிடம் நேசமாய் இருப்பது போல் காட்டிக் கொண்டனர்.

என்ற விளக்க உரைகளால் தெளிவு படுத்தியுள்ளார்.

யார் இவர்கள்?

ஒரு வேளை இங்குள்ள சிற்றரசர்கள், ஜெமீந்தார்கள், ஹைனெஸ்கள் என்ற ரகங்களில் உள்ள குறு நில மன்னர்களைத் தான் இந்தக் 'கூர் மதி' கொண்ட அமைச்சர் குறிப்பிடுகிறார் என்று கருதுவதற்கும் இடம் இல்லையே! அவர்கள் இவர்களிடம், தங்கள் நிலைமையை உணர்ந்து நேசமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லையே! கூட்டு ஒப்பந்தமன்றோ செய்து கொண்டுள்ளார்கள். நீங்கள் நோகாமல் அடியுங்கள்—நாங்கள் ஓயாமல் அழுகிறோம் என்ற முறையிலல்லவா இந்தக் குறு நில மன்னர்களுக்கும் கோலோச்சும் காங்கிரஸ்காரர்களுக்கும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், இந்நாட்டிலுள்ள ஜெமீன்களையெல்லாம் சர்க்கார் வசப்படுத்தி, அந்த ஜெமீன்களுக்குரியவர்களை மற்றுமுள்ள குடிமக்களைப் போல் சாதாரணமானவர்களாக்கப் போவதாக வாய்ச் சவடால் அடித்தனர்.

ஆனால், இன்று நிலைமை என்ன?

அந்தக் குறுநில மன்னர்களுக்கு எத்தனை கோடி கொடுப்பது என்று 'எஸ்டிமேட்' போட்டுக்கொண்டிருக்கிறது 'சமதர்மக்' காங்கிரஸ் சர்க்கார்.

இந்தஎஸ்டிமேட், அவ்வப்போது கூட்டுவதும் குறைப்பதுமானகுழப்பத்தை உண்டாக்கிக் கொண்டு, அமைதிக்குப் பங்கம் விளைவித்த வண்ணம் இருக்கிறது.

இந்தக் குறுநிலமன்னர்களின்புன் சிரிப்பைக் காணும்போது, நஷ்டஈட்டில் கொஞ்சம் குறைக்கலாமா என்ற குதூகலத்தையும், அவர்களின் உருட்டு விழிகளையும் முரட்டுப்பிடிவாதத்தையும் காணும் போது நஷ்டஈட்டைக் கொஞ்சம் அதிகப்படுத்தலாமா என்ற பரிதாபத்தையுமே நாம் காண்கிறோம்.

வெள்ளையனை விரட்டி ஆறாண்டுகளாகியும் இந்தப் பிரச்னையையே இன்னும் இந்த வீராதி வீரர்களால் தீர்க்கமுடியவில்லை.

நிர்வாகத் திறமை ஒரு சிறிதும் இல்லாத வெறும் கிளர்ச்சிக்காரர்கள் (Agitators)தான் காங்கிரஸ்காரர்கள் என்றபோதிலும், நிர்வாகத்திறமை படைத்த அம்பேத்கார், சண்முகம் போன்றவர்களைத் துணைக் கழைத்து, அரசியல் பரீட்சையில் பயிற்சி பெற்ற பிறகாவது இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டிருக்கலாம். ஆனால், காணவில்லை. காரணம்—மாணவர்கள், உபாத்தியாயர்களை மதிக்கவில்லை. பயிற்சி நடைபெற்று,

முதல்பரீட்சை (Quarterly Examination) நடப்பதற்குள்ளாகவே,
மாணவர்கள், தங்களுக்கு எல்லாம்
தெரிந்துவிட்டது என்று எண்ணிக்
கொண்டு, உபாத்தியாயர்களை
விரட்டி விட்டனர் அல்லது அவர்
களாகவே விலகும்படியான நிலை
மையை உண்டாக்கிவிட்டனர். அதா
வது, நிர்வாகத்திறமைபெற்றவர் எவ
ரும் தங்களிடமில்லை என்பதை வஞ்
சகமற்று ஒப்புக்கொண்டகாங்கிரஸ்
தலைவர்கள், தங்களுக்குப் புதிதாக—
முதல் தடவையாகக் கிடைத்த நிர்
வாக இயந்திரத்தை ஓட்டுவதற்கு
ஏற்கனவே, அந்தத் துறையில் நல்ல
பயிற்சி பெற்றிருந்த எதிர்க்கட்சிக்
காரர்களை, மரியாதை காட்டி வர
வழைப்பதுபோல் பாசாங்குசெய்து,
சில பதவிகளை வழங்கி, அதன்வாயி
லாக ஓரிரு நல்ல நிர்வாக அம்சங்
களை அவர்களிடமிருந்து தெரிந்து
கொண்ட உடனேயே, தங்களுக்கு
எல்லாம் தெரிந்துவிட்டது, இனி
யாரும் தேவையில்லைஎன்று கருதிக்
கொண்டு அவர்களை விரட்டி விட்ட
னர் என்று பொருள். எனவே,
அரைகுறையாகத் தெரிந்து
கொண்ட நிர்வாக அறிவு, இந்தக்
குறுநில மன்னர்களிடம் எப்படி
நடந்துகொள்ள வேண்டுமென்
பதை விளக்கி, எது செய்யப்பட
வேண்டுமோ அது செய்ய முடியாத
தாகிவிட்டது.

இதனை நன்குணர்ந்த குறுநில
மன்னர்கள், தங்களுக்கு இயற்கை
யாக அமைந்துள்ள சாகசத்தால்
காங்கிரஸ் தலைவர்களை மிக எளி
தாக ஏமாற்றிவிட்டனர். 'நாங்கள்
உங்கள் கோரிக்கைகளுக்கு இணங்கி
வருகிறோம்' என்று 'நேசபாவம்'
காட்டுவதுபோல் பாசாங்குசெய்து,
"எங்களுக்கு நஷ்டஈடாக ஏதாவது
கொஞ்சம் 'சில்லரை' கொடுத்தால்
போதும்" என்றுகேட்டுக்கொண்ட
னர். இதனைக் கேட்ட காங்கிரஸ்
தலைவர்கள் களிபேருவகை
அடைந்து, "ஆகா, அதற்கென்ன
இதோ தந்துவிட்டோம்" என்ற
னர். பின்னர் நிலைமையைச் சிறிது
ஊன்றிக் கவனித்தபோது, "ஓகோ
இவ்வளவு தொகை நஷ்டஈடாகக்
கொடுக்கவேண்டுமா? இது முடி
யாத காரியமாயிற்றே! கொஞ்சம்
குறைத்துக்கொள்ளமாட்டார்களா'
என்று இப்போது கேட்டுப் பார்க்
கின்றனர். 'ஆகா' என்ற ஆனந்தக்
குரல் பின்னால் 'ஓகோ' என்ற ஒப்
பாரியாக மாறிவிட்டதே என்ற
கவலை, இன்று காங்கிரஸ் சர்க்கா
ரைக் கலக்க ஆரம்பித்திருக்கிறது—
எந்த அளவு தொகை கொடுத்தால்
இந்தக் குறுநில மன்னர்களைத்
திருப்திப்படுத்தலாம் என்ற ஏக்கம்
பிறந்திருக்கிறது.

இந்தக் குறுநில மன்னர்கள்,
காங்கிரஸ் சர்க்காரிடம் பணிய
வில்லை, பாசாங்கே செய்கிறார்கள்
என்பதை, நாம் ஏற்கனவே கூறி
வந்திருக்கிறோம். சமஸ்தானாதிபதி
கள், தங்கள் தந்திரத்தால், தங்கள்
சுக வாழ்வைக் காப்பாற்றிக்கொண்
டனர்—தேசபக்தியல்ல அவர்களின்
இந்தப் போக்குக்கு காரணம்—சுய
சுகமே அவர்களின் குறிக்கோள்"
என்று நாம் அன்றே கூறியுள்
ளோம். சர்தார் வல்லபாய் பட்டேல்
சல்லடம் கட்டிக்கொண்டு, "சமஸ்
தானாதிபதிகளைச் சாய வைக்கிறார்
பாருங்கள்" என்று கூறப்பட்ட
அந்த நாட்களிலேயே நாம் இந்த
உண்மையைக் கூறியுள்ளோம்.

எனவே, வெள்ளையன் வெளி
யேறக் கூடாதென்று கடவுளைக்
கூடப் பிரார்த்தித்ததாகக் கூறப்
படும் இந்தக் குறுநில மன்னர்
களுக்கு, வெள்ளையன் வெளியேறிய
தால் நஷ்டமோ, லாபமோ எதுவும்
கிடையாது. வேண்டுமானால், வெள்
ளையன் வெளியேறியது இவர்
களுக்கு லாபம் என்று கூறலாம்.
வெள்ளையன் நிலைத்திருந்தால், இந்
தச் சமஸ்தானாதிபதிகளை ஒன்று
மில்லாமல் மட்டந்தட்டியிருப்பான்.
ஆனால், இப்போதோ நிலைமை அப்
படியில்லை. சமஸ்தானாதிபதிகளின்
சுகவாழ்வு சர்வஜாக்கிரதையாகக்
காப்பாற்றப்பட வேண்டுமென்பதில்
காங்கிரஸ் சர்க்கார் பெரிதும் கவலை
எடுத்துக்கொண்டுள்ளதென்பதில்,
குறுநில மன்னர்களுக்கு எள்ளள
வும் சந்தேகம் கிடையாது. குறுநில
மன்னர்கள் யார் என்பதும், காங்கி
ரஸ்காரர்கள் எப்படிப்பட்டவர்கள்
என்பதும் ஒருவருக்கொருவர் நன்
றாகப் புரிந்துகொண்டிருக்கும் ஒரு
உண்மையாகும். எனவே, வெள்ளை
யன் காலத்தில் இருந்த அற்ப
சொற்ப சந்தேகம் கூடக்காங்கிரஸ்
சர்க்கார் காலத்தில், இந்தக் குறுநில
மன்னர்களுக்கு ஏற்பட எந்தவித
யான காரணமும் இல்லை.

உண்மையான ஜனநாயக ச
கார் இங்கு ஏற்படும் சமயத்
இந்தச் சமஸ்தானாதிபதிக
சாதாரண ஜனங்களாக்கப்படு
களேயன்றி, அதுவரை, இவர்க
இடம்பாச்சாரி வாழ்க்கைக்கு இ
யூறாக எந்தவிதமான அசம்பாவி
களும் நடைபெறாது — அச்
கொள்ளவேண்டாம் என்று அ
சிற்றரசர்களுக்கு அபயம் கொடு
றோம்.

அதே சமயத்தில், அ
சமஸ்தானாதிபதிகள், தாங்
ஏமாந்ததால், காங்கிரஸ் சர்க்
டம் நேசமாக இருப்பதுபோல்
டிக்கொள்கின்றனர் என்று ஆ
ரியார் கூறுவது முற்றி
உண்மை—அவர்களுக்கு உ
யான நேசமோ தேசபக்தி
கிடையாது— அவர்களுடைய கு
கோள், "சுகவாழ்வு!" இது ஒ
தான். மற்ற எதைப்பற்றிய க
யும் அவர்களுக்குக் கிடைய
இதனைக் காங்கிரஸ்காரர்கள் உ
வதற்குப் பல காலத்துக்கு மு
பிருந்தே நாம் கூறிவருகிறோம்
பதை ஆச்சாரியாருக்கு நி
படுத்தி அவர்கள் பட்டியலி
மைச் (தி. மு. க.) சேர்ப்பது
யல்ல—முறையல்ல— சிறிதளவு
சியலனுபவம் உள்ளவர்கூட இ
தம் பேசமாட்டார்கள் என்று
கிறோம்.

இந்தக் குறுநில மன்னர்கள்
யத்தில் மட்டுமல்ல, எ
துறையை எடுத்துக்கொண்ட
காங்கிரஸ்காரர்களுக்கு நிர்வா
திறமையில்லை என்பது எல்லோ
அறிந்த ஒரு இரகசியமாகும்.
நாட்டாரிடம் சாமான்கள் வா
திலிருந்து, உள்நாட்டு விவ
களைத் தீர்த்துவைப்பதுவரை
எதிலுமே நிர்வாகத் திறமை
யாது. என்றபோதிலும், "
தான் இந்நாட்டை ஆள்வோம்
களுக்குத்தான் அந்த உரி
உண்டு" என்று கூறிப் பெரு
பட்டுக்கொள்வதில்மட்டும் கு
சல் இல்லை. ஒரு நாட்டை
வர்களுக்கு, அதற்குரிய திற
இருக்கவேண்டும்— அப்போத
நிர்வாகம் சரியாக நடை
என்பது நாம் காங்கிரஸ் ச
மீது சுமத்தும் நியாயமான கு
சாட்டுகளில் ஒன்றாகும். ச
நேருசர்போதெல்லாம் இந்த

சாட்டை அவர்கள் ஒப்புக் ள்ள மட்டும் தவறுவதில்லை.

"Mr. Jawharlal Nehru, Sardar Patel and myself and others had very little experience of administration"

ன்று 25—10—53-ல் சேலத்தில் ச்சாரியார் குறிப்பிட்டுப் பேசி ள்ளார். "அதாவது, பண்டித நேரு, தார் படேல், நான், மற்றவர்கள் வாகத் திறமை இல்லாதவர்க கவே இருந்தோம்." 'very little' ன்றால் 'மிகவும் சொற்பம்' என் து மொழி பெயர்ப்பாகும் என்ற ாதிலும், அதன் உண்மை அர்த் ம் 'கொஞ்சமும் இல்லை' என்பதே கும். 'இந்து'ப் பத்திரிகையில் வளிவந்திருக்கும் இந்தச் செய் யை, அதன் சகாவான 'தினமணி' ம் வெளியிட்டிருக்கிறது. 'இந்து' ல் காணப்படும் இதே வாசகம்,

"அனுபவம் இல்லாத நிலைமை யில் தேச நிர்வாகப் பொறுப் பைக் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்ற னர்"

ன்று 'தினமணி' இதழில் வெளி ந்திருக்கிறது. யார்யாருக்கெல் ம் நிர்வாகத் திறமை இல்லை ன்ற பட்டியலை ஆச்சாரியார் சலத்தில் படித்துக்காட்டியிருக் றார். அந்த விபரம் 'இந்து'ப் பத்தி கையில் வந்திருக்கிறது. ஆனால், னமணி' அந்தப் பட்டியலைத் தர ல்லை. மொத்தத்தில் காங்கிரஸ் லைவர்களுக்கே நிர்வாகத் திறமை ல்லை என்று கூறிவிட்டது. பண் தநேரு, சர்தார் படேல், சக்கர ர்த்தி இராஜகோபாலாச்சாரி, ற்றுமுள்ள காங்கிரஸ் தலைவர்கள் ருக்குமே நிர்வாகத்திறமை இல்லை ன்று கூறுவது ஒருவேளை அந்தத் லைவர்களை இழிவுபடுத்துவதாகக் ருதப்பட்டுவிட்டால் என்ன செய் து என்ற ஏக்கமோ என்னவோ, னமணி' அந்த விபரத்தை வெளி டவில்லை. "ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே" என்ற பழ மொழியைத் 'தினமணி' பின்பற்றி து போலும்! 'தினமணி'யார் இவ் தம் கூறுவது எப்படியிருக்கிற தென்றால், குற்றவாளி, தான் செய்த குற்றத்தைக் கோர்ட்டில் ஒப்புக் கொள்ளும் சமயத்தில், குற்றவாளி ன் சார்பில் சாட்சி கூறவந்த நபர் காட்டாரை நோக்கி 'இவர் குற்ற வாளியல்ல" என்று கூறுவதுபோல் இருக்கிறது. குற்றஞ் செய்தவனே குற்றத்தை ஒப்புக்கொள்ளும் போது பக்கத்தில் நிற்பவன் அதை மறுத்தால் 'அப்படிப்பட்டவனைப் பற்றி என்ன நினைப்பீர்கள்??

'எங்களுக்கு நிர்வாகத் திறமை இல்லை' என்று 25—10—53-ல் ஆச்சாரியார் இங்கே சேலத்தில் பேசியுள்ளார். மறுநாள் 26—10—53-ல் பண்டிதநேரு அங்கே டில்லியில் பேசியுள்ளார்.

"நிபுணர்கள் நிறைந்த காடாகி விட்டது டில்லி. திக்குத்திசை புலப்படாத நிர்வாக வனமாகி விட்டது. மனம்போன போக்கில் வியாபித்துக்கொண்டே போகின் றன சர்க்கார் இலாகாக்கள். இதை அபிவிருத்தி என்றே சொல்வதற்கில்லை. தலை அப்ப டியே இருக்க, கால்கைகள் மட் டும் நீளும்பட்சத்தில் அதை வளர்ச்சி என்று சொல்ல முடி யுமா? அதுபோலத்தான் இது வும். அளவில் பெருத்தால் திறமை குன்றிவிடுகிறது"

என்று பேசியுள்ளார். டில்லியி லுள்ள சர்க்கார் காரியாலயத்தை 'நிபுணர்கள் நிறைந்த காடு' என்று நேரு குறிப்பிடுகிறார். நிபுணர்கள் அதிகம் இருந்தால் காடும் நாடாகும் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். ஆனால், டில்லியிலுள்ள நிபுணர்கள் நாட்டையே காடாக்கப் பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட் டைப் பண்டிதநேரு அந்த 'நிபுணர் கள்' மீது சுமத்துகிறார். அதாவது நிபுணர்கள் அதிகம் இருப்பதால் காரியங்கள் சரிவர நடப்பதற்கில்லா மல் போய்விடுகின்றன—காரியங்கள் ஒழுங்காக நடக்கவில்லையென்றால், நாடு காடாவதைத் தவிர, வேறு எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டு விடாது—இது பண்டிதர் கூறும் மறைமுகமான உண்மை. ஆனால், வெளிப்படையான உண்மை என்ன என்பதும் பண்டிதருக்குத் தெரி யும், எனவேதான், சர்க்கார் இலா காக்கள் எல்லாம் மனம்போன போக்கில் விரிவடைந்துகொண்டே போகின்றன என்று கூறுகிறார். அதாவது, நிபுணர்கள் அதிகப்பட அதிகப்பட, இலாக்காக்கள் அள வில் பெருக்கின்றனவே யொழிய, அபிவிருத்தி எதுவும் ஏற்படவில்லை என்று நேரு கூறுகிறார். தலையில் வளர்ச்சியில்லாமல் இருக்கும் போது, கை கால்கள் மட்டும் நீண்டு கொண்டேபோனால் அபிவிருத்திக் குப் பதில் அவலட்சணத்தைத் தான் காணமுடியும் என்று கூறுகி றார். வண்ணான் சால்போல் வயிறு பெருத்தவனால் எந்த வேலையும் செய்யமுடியாதென்று சொல்வார் கள். அதுபோல், நிபுணர்களும் அறிவில் பெருக்காமல், தொகையில் பெருத்தால் எந்தவிதமான அபி விருத்தியும் ஏற்படாதென்று பண் டிதநேரு கூறுகிறார்.

நிபுணர்கள் என்ற பெயரால் சர்க் கார் காரியாலயங்கள் நிரம்பி தொகை யில் வளர்ச்சி யடைகின்றனவே யன்றி, நாட்டின் முன்னேற்றத்தில் எந்தவிதமான வளர்ச்சியும் ஏற்பட வில்லை என்று கூறுகிறார்.

இதற்குக் காரணம் என்ன? அந்த நிபுணர்கள், பெயரளவில் நிபுணர் களேயன்றி, உண்மையில் திறமை சாலிகள் அல்ல. எனவேதான், ஒரு 'நிபுணர்' இன்னொரு நிபுணரை வரவேற்றவண்ணம் சர்க்கார் காரியா லயத்தை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கின்றனர். என்ன அபி விருத்தி தெரியுமோ? யுத்தத்திற்கு முன் டில்லியில் 3200 வில்லைச்சேவ கர்கள் இருந்தனர். இப்போது, அதாவது, சுதந்தரம் கிடைத்தபின் 19000 வில்லைச் சேவகர்கள் (சப் ராசிகள்—Peons) இருக்கின்றனர். இந்த அபிவிருத்திப் புள்ளி விபர மும் பண்டிதநேரு அவர்களால் தரப்படுகிறது.

"யுத்தத்திற்கு முன் 3200 ஆக இருந்த சப்ராசிகள் இப் போது 19000 ஆக அதிகரித் திருக்கிறது"

என்று பண்டித நேரு கூறியுள்ளார். இந்த அதிகரிப்பு அபிவிருத்தி, வில்லைச் சேவகர் வேலைபார்க்கும் நிலையிலுள்ள ஏழைகளுக்கு நல்லது தான் என்ற போதிலும், அந்த நிர் வாக வனத்தில் வளர்ந்தோங்கி நிற் கும் நிபுணமரங்கள் இந்த ஏழைச் சப்ராசிகளைச் சளைக்காமல் வேலை வாங்குவதைக் காணும்போதுதான் கன எரிச்சல் உண்டாகிறது பண் டித நேருவுக்கு. பக்கத்தறையில் இருக்கும் இன்னொரு நிபுணருடன் பேசுவதற்குப் 'போன்' இருக்கிறது —போய் வருவதற்கு வசதி இருக் கிறது—இருந்தும் இந்தச் சப்ராசி களின் உதவியை இந்த நிபுணர்கள் ஏன் நாட வேண்டும் என்று நேரு

கேட்கிறார். கையெழுத்துப் போடுவதற்காக மட்டும் ஒரு நிபுணரா என்று வேறு சாடுகிறார். இப்படிப் பட்டவர்களைக் கட்டாயமாக ரிடையராகும்படி செய்ய வேண்டுமென்று வேதனையோடு கூறுகிறார். அந்த அளவுக்கு நிர்வாகத்தில் ஊழல் மலிந்து விட்டதே என்பதை உணர்ந்து உள்ளம் நொந்து பேசுகிறார்.

காங்கிரஸ் சர்க்கார் மீது நாம் எந்தக் குற்றச் சாட்டை முக்கியமாகக் கருதிச் சுமத்தி, அவர்களால் ஆட்சி நிர்வாகத்தை நடத்த முடியாதென்று கூறுகிறோமோ, அதே குற்றச் சாட்டைத்தான் நேருவும் சுமத்துகிறார். இதில் ஒரே ஒரு வித்யாசம் தான். அவர், அவர்களோடு இருப்பவர்—நாம் எதிர்க் கட்சியினர். ஒரே விஷயத்தை அவர் கூறும் போது அங்கலாய்ப்பும், நாம் கூறும் போது ஆத்திரமும் உண்டாகிறது. அதாவது, தகப்பன், பிள்ளையைப் பார்த்து முட்டாள் என்று கூறும்போது பிள்ளைக்குக் கோபம் ஏற்படுவதில்லை. பிறத்தியார் யாராயினும் அந்தப் பையனைப்பார்த்து உனக்கு அறிவில்லை என்று கூறினால், உடனே ஆத்திரம் ஏற்பட்டு விடுகிறது. தகப்பனுக்கு இருக்கிற உரிமை பிறத்தியாருக்கு ஏது என்று அந்தப் பையன் கருதுகிறான். எனவே அவனுக்குக் கோபம் ஏற்படுவது சகஜம்தான் என்று சிலர் வாதாடலாம். அதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. ஆனால், இந்த ஜனநாயகப் பையன் இருக்கிறானே, அதாவது ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளப்படும் நிர்வாகத் திறமையற்ற பையன், அவன், ஏதாவது தவறு செய்தால், அவனை, அவனுடைய நாயகர்கள்—பொது மக்கள் என்ற தந்தைமார் திருத்தி நல்வழிப்படுத்தும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். எனவே அந்தப் பையனுக்குக் கோபம் உண்டாகக் காரணம் இல்லை. என்ற போதிலும் கோபிக்கிறான். இவனுடைய நியாயமற்ற கோபத்தைக் காணும் தந்தை, "இவன் தன்னுடைய அறியாமையினால் இவ்வாறெல்லாம் கோபிக்கிறான்—எனவே இவனுக்கு நல்லறிவூட்டித் திருத்த முயல்கிறான். அப்பொழுதும், அவன் முரட்டுத்தனமாகத் தன் கோபத்தை அதிகப்படுத்துவதைத் தந்தைபார்க்கிறான். அப்பொழுதான் அந்தத் தந்தை சட்டத்துக்கு உட்பட்ட முறைகளைக்கையாண்டு, அவனைத் திருத்தி விடலாம் என்ற தன்னுடைய கடைசி முயற்சியையும் செய்து பார்க்கிறான். இது, அவனுக்குக் இறுதியில் வெற்றியையுந் தந்துவிடுகிறது.

இந்த முறை, இங்கு மட்டுமல்ல, தட்டிக்கேட்க ஆளில்லாத சர்வாதிகாரத் தனயர்கள் இருந்த பல நாடுகளிலும் பல்வேறு காலங்களில் கையாளப்பட்டவைதான் —ஒன்றும் புதிதல்ல, என்றபோதிலும், சில நாடுகளில், இந்தமுறைகள் குறைந்த அளவில் கையாளப்பட்டு, வெற்றி விரைவில் கிடைத்திருக்கிறது. சில நாடுகளில் முறைகள் முழுவதுமே கையாளப்பட்ட பின்னர் தான் வெற்றி கிட்டியிருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் முறைகள் அதிகப்படாதென்றே—கருதுகிறோம்—இந்த நம்பிக்கையை நாம் இன்னும் இழக்கவில்லை. ஒருவேளை, நிலைமை, முறைகள் முழுவதையுமே கையாளும்படி நிர்ப்பந்தித்தால், அதற்கு, அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கியவர்களேயன்றி மற்றவர்கள் ஒருபோதும் பொறுப்பாகமாட்டார்கள். நிர்வாகம் ஒழுங்காக இருந்தால் முறைகள் குறையும்—நிர்வாகத்தில் ஊழல் அதிகப்பட்டால் முறைகளும் அதிகப்படும். இதனைத் திறமைக்குறைவோடு நிர்வாக யந்திரத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியாளருக்கு நினைவூட்டுகிறோம்.

*

வெள்ளையன் இந்நாட்டைவிட்டு போகக்கூடாதென்று எண்ணியவர்களின் பட்டியலைத் தயாரித்த ஆச்சாரியார், குறுநில மன்னர்களுக்கு அடுத்தபடியாக ஜஸ்டிஸ் கட்சியின் பெயரைக் குறிப்பிடுகிறார். குறுநில மன்னர்களைப் போலவே, இவர்களும் வெள்ளையன் வெளியேறக் கூடாதென்று கூறியவர்கள்தான் என்றபோதிலும், குறுநில மன்னர்கள், வெள்ளையன் இங்கிருந்து போகவேகூடாது என்றுகூறியதைப் போலில்லாமல் இவர்கள் சிறிது இடைவெளிதந்து, நடந்துகொண்டார்கள் என்று ஆச்சாரியார் கூறுகிறார்.

"வேறு சில கோஷ்டிக கடைசிவரை பிரிட்டிஷ் சர் காரை ஆதரித்தன. தங் கோரிக்கைகளைப் பூர்த்தி செய் பிறகே பிரிட்டிஷ் சர்க்கார் வெ யேற முடியுமென இல கோஷித்தன. ஆனால், அ கோரிக்கைகள் பூர்த்திசெய் முடியாதவையாக இருந்த இக்கோஷ்டியினருக்கு அக்கால தில் ஜஸ்டிஸ் கட்சி அல்லதமி வாதக்கட்சி என்று பெயர்"

என்பதாகப் பேசியுள்ளார். இ மிதவாத — ஜஸ்டிஸ் கட்சியின வெள்ளையன் ஆட்சியைக் கடை வரை ஆதரித்துவந்தபோதிலு அவர்களுடைய சில கோரிக்கைக நிறைவேற்றப்பட்டால், அவன் வெள்ளையன் வெளியே போவதி நியாயம் இருக்கிறதென்ற மு வோடு இருந்தவர்களாம்! இந்த மி வாதிகளின் அந்தச் சில கோரிக்கை களைத் தவிர, வெள்ளையன் வெ யேறவேண்டுமென்பதில், காங்கிர காரர்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியின ருக்கும் யாதொரு வித்தியாசமு இல்லையாம்! ஆனால், இவர்களுக்கு சில கோரிக்கைகள் மட்டும் இரு தனவாம்! எனவே, அந்தக் கோரி கைகள் எவை? விளக்கம் தரவில் ஆச்சாரியார்.

சர் தியாகராயர், டாக்டர் நாய டாக்டர் நடேசனார், பனகல்ரா பன்னீர் செல்வம் முதலான த வர்கள், சில கொள்கைகளுக்கா தென் இந்திய நல உரிமைச் சங்க என்ற ஒரு ஸ்தாபனத்தை உ டாக்கினர். பார்ப்பனரல்லாத மக் ளின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதொன்றுதான் இந் ஸ்தாபனத்தின் கொள்கையு கோரிக்கையுமாக இருந்தது. அத காக வழக்கறிஞர் எஸ் முத்தய்ய போன்றவர்கள் போராடி ஓரள வெற்றியும் கண்டனர். அந்தக்கால தில் தன்மான இயக்கத்தைத் தவி வேறெதிலும் கலந்துகொள்ளா நிலையில் இருந்த நாமும் அந்த ஸ்தா பனத்தின் கொள்கையைப்பாராட் அந்தக் கொள்கை முழுவெற்றி பெறவேண்டுமென்பதற்கா அதற்கு ஆதரவும் தந்துவந்தோம் தன்மானக் கொள்கைகளைச் சிறிது விட்டுக் கொடுக்காமல், எங்கள் ஆதரவு அதற்கு இருந்து வந்தது.

(13-ம் பக்கம் பார்க்க)

"நாம், பாக்கியசாலிகள்!"

"கொள்ளை கொண்டுவிட்டாய்!"

"நானா?"

"ஆமாம்—வாலிபர் இதயங்களைக் காள்ளை கொண்டுவிட்டாய்!!"

"எப்படி?"

"புதிய எண்ணங்களைக் கூறுகிய். அவர்களிடம், புதுமை ஆர் த்தைத் தூண்டுகிறாய்!"

"தவறா, அது?"

"எவ்வளவு நெஞ்சுரம் உனக்கு—வறா?' என்று கேட்க. நீ செய்வது பெருந் தவறு. மன்னிக்கமுடியாத வறு!"

"விசித்திரமாயிருக்கிறதே உங்கள் ளக்கம்"

"நீ, விதண்டாவாதி! அப்படித் ன் சொல்லுவாய்"

"என் தவறை எடுத்துச் சொல்ல வண்டுகிறேன். தயவுசெய்து கூறுங் ள்!"

"கூறிக்கொண்டு காலத்தைக் ழிக்க விரும்பவில்லை. கொலைபாத னைவிடக் கொடியவன், நீ. இந்த ண்ணில் உலவுவதே—மகாபாபம்!"

"ஏன், ஐயனே—இந்தக் கோபம்?"

"வருங்கால உலகமாம் வாலிபர் ள, வசீகரித்து பழைய சட்டதிட் கள் மீது, மோதிவிடும் உன்னைப் போற்றிப் புகழவேண்டுமென எதிர் ர்க்கிறாயா?"

*

அவர்கள், கோபமாகப் பார்த் னர்! குற்றஞ் சுமத்தப்பட்ட வனோ, புன்னகையோடு, அவர் ளை நோக்கினான்!! அவர்களிருந்த டமோ, அதிகாரபீடம்! அவன் றதோ, கூண்டுக்குள்!!

புலிபோல், பார்த்தனர், அவர் —அவனோ, புல்லினும் இழிந்த களாய் நினைத்தான், அவர்களை. சிரிப்பு, உதடுகளில் தவழ்ந் ாடியது! சாதாரணப் பரிசா, வனுக்குக் கிடைக்கப்போவது? ரும்புச் சங்கிலியோ—பாதாளச் றயோ—தூக்குக் கயிறோ—ளுக்கு மத்தியிலோ—இவை னை, அவனுக்குக் கிடைக்கக் கூடிய பரிசுகளாயிருக்கும். அதி லும் அவன் பேசிய வாசகங்கள் என்ன சாதாரணமானவையா? அல்ல! அல்ல!! ஆண்டாண்டு காலமாய், நீடித்துவரும் பழக்க வழக்கங்களை எதிர்த்தான்—சும்மா, விடுவரா! எதிர்த்தது மட்டுமல்ல, இளைஞர் படையையும், தன்வசம் சேர்த்தான் — சகித்துக் கொள்ளக் கூடியதா! ஆகவேதான், ஆதிக்கக்காரர்கள், அவனை சபாமண்டபம் இழுத்து வந்து, கூண்டிலே நிறுத்தி, குற்றச்சாட்டுகளை, ஒப்புவித்தனர்.

குற்றச் சாட்டுகளைக் கேட்ட அவன், கலங்கவில்லை — சிரித்தான். மறுக்கவில்லை — மாறாக, தலை நிமிர்ந்து நின்றான்.

"ஆகா! என்ன பாக்யம் செய்தேனோ?"—என்று கூறவில்லை — அவன், பார்வை, அத்தகைய பதில் சொல்லிற்று.

அந்தப் பார்வை சிந்திய கம்பீரத்தை—பீடாதிகள் உணரவில்லை. அவனை, கோபாவேசத்தோடு பார்த்தனர். பீடாதிகளும் சாதாரணமானவர்களல்ல; கிரேக்க சாம்ராஜ்ய பீடாதிகள்! கிரேக்க பீடாதிகள் மீதும் தவறில்லை—அவர்கள் அப்போதுதான் 'அவனை'ச் சந்திக்கின்றனர். அவன் 'குரல்' இளைஞர் தம் உள்ளத்தைத் தடவி, உணர்ச்சிமயமாக்குவதை உணர்ந்தனர். அவர்கள் வாழ்ந்த காலம், விஞ்ஞானமும் விவேகமும் 'சித்து' புரியும் இந்த நூற்றாண்டல்ல. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்!! கமண்டலத்துக்கடைக்கலமாக, அரசுகள் கிடந்த காலம் அது. விண்ணின் அற்புதங்களையும் மண்ணின் பரப்பினையும் அறிந்திருக்க முடியாத நூற்றாண்டு. அது மட்டுமல்ல, பாரம்பரியமான விஷயத்தில், எவனுமே தலையிடாத காலம் அது. அப்போது, ஒருவன் அந்தப் பழமைகளை எதிர்த்து—காட்டுமிராண்டித்தனமான கடவுள்கள் ஏன்?—என்று கேட்டால், அதைச் சகிப்பரா, கடவுள் பெயர் சொல்லி, கதை கட்டி வாழ்வோர். இழுத்து வந்தனர். எதிரே நிறுத்தினர். குற்றப் பத்திரிகை படித்தனர். தீர்ப்பும் வழங்கினர். சிரித்த வண்ணமே, தீர்ப்பை ஏற்றுக் கொண்டான்!

அந்தத் தீர்ப்புதான்—ஒரு கோப்பை விஷம். அந்தத் தீர்ப்பு—அவன் பெயரை, அழியாமற்செய்தது. கிரேக்க சாம்ராஜ்யச் சரித்திரத்துக்கு அழியாத இழுக்கையும் தேடித்தந்தது.

சாக்ரடீஸ்!—இந்தப் பெயர், இன்றும் எதிரொலிக்கிறது, உலகில். இவனைத்தான், விஷம்கொடுத்துக் கொன்றனர், கிரேக்கநாட்டு, அதிகாரப் பீடத்தினர். விஷத்தை ஏந்தினான் — அப்போதும் சாக்ரடீஸ் முகத்தில் தயக்கம் பிறக்கவில்லை—மகிழ்ச்சி மலர்ந்தது! சிரித்தான். சிரித்துக்கொண்டே, செத்தான்.

அதிகாரமேந்திகள், குற்றஞ்சுமத்தியபோதும், தீர்ப்பை வழங்கிய போதும், தண்டனையை நிறைவேற்றியபோதும், அவன் வீசிய புன்சிரிப்பின் பொருளை, அந்நாள் கிரேக்க மன்றம் உணரவில்லை. ஆனால், பின்னால், கிரேக்க மன்றம் மட்டுமல்ல — உலக மன்றமே, உணர்ந்தது. அதனால்தான் அவன் பெயர், இன்றும் இருக்கிறது! என்றும் இருக்கும்!!—அழியாது.

*

'கடவுள் இல்லை!' —இவ்வண்ணம் கூறவில்லை, சாக்ரடீஸ்.

'கடவுள், அசிங்கமாக இருக்க வேண்டாம்!!' இவ்விதம், சொன்னான். அதுமட்டுமல்ல, 'நல்ல கடவுள்களை வணங்குவோம்' என்றும் தெரிவித்தான்.

எனினும், அந்த நாள், கிரேக்க பீடாதிகள் அவனைக்கண்டு மிரண்டனர்—சாகடித்தனர்.

இதற்கு, அவர்கள் கட்டிய ஒரே விளக்கம்:

"இளைஞர் உள்ளங்களைவசீகரித்துவிட்டான்"

இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டதால்தான், சாக்ரடீஸ், சிரித்தான்—அவன் கண்களில் ஓர் புதுஒளி பிறந்தது—சாவையும் மகிழ்ச்சியோடு ஏற்றான்.

*

எந்தக் குற்றச்சாட்டால், சாக்ரடீசும், உலக அரங்கில் தோன்றிய உத்தமோத்தமர்களும், பிணமாக்கப்பட்டனரோ — அதே குற்றச்சாட்டை, ஏந்தும் 'பாக்கியம்' கிடைத்திருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு.

அதனால்தான், இங்கே ஆர்ப்பரிக்கும் அதிகாரமேந்திகளைக் காணும்போது, திராவிட முன்னேற்றக் கழகக் காளையர் கோபம்கொள்ளவில்லை சோகம் பிறப்பதில்லை, அவர்கள் முகத்தில் — மாறாகச் சிரிக்கின்றனர்! சிரித்தபடியே செல்கின்றனர் — மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று எண்ணியபடி!

இந்தக் காட்சியைக் காணுகின்ற அதிகாரமேந்திகளின் உள்ளத்தில், கிலியும் வேகமும், கூத்தாடுகிறது. இந்தக் கூத்தின் விளைவாக, சிற்சில "அதிகாரசித்து"களைப் புரிபவராய்—தி.மு.கவின், புன்சிரிப்பைப் புயலாக மாற்றலாம் — புயல் கிளப்பும் புழுதியில், மறைந்தவாறு, கொஞ்சக் காலம் ஆட்சியை நடத்தலாம்—என்று, அன்பர் ஆச்சாரியார், ஆருடம் கணிக்கிறார். அந்த ஆருடத்தின் சின்னமாக, ஆங்காங்கும் கலவரப் புயல்களைச் சிருஷ்டிக்க விரும்புகிறார். 'ஊர் இரண்டுபட்டால் — கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' அல்லவா!

அதனைப்புரியா 'அரசியல் அப்பாவி'கள் சிலர் — அவரது மயக்கு மொழிக்கும், தளுக்குப் பேச்சுக்கும் தம்மை அடிமையாக்கி வருகின்றனர். இந்த 'அடியார்'களின் போக்கை நினைத்தால், நாணம் வருகிறது, நமக்கு. குடை ராட்டினம் சுற்றுவதைப் பார்த்திருக்கலாம் — உங்களில் பலர். நடுவில் ஒருவன் இருந்துகொண்டுசுற்றுவான்குதிரை பறக்கும்—மாடு பறக்கும்—நாற்காலிகள் பறக்கும். அந்த சூத்ரதாரியின் நிலையில், அவரும்—'பறக்கும்' வகைகளில், பாராளும் பாக்யம் பெற்றோரும், இருக்கின்றனர். இதனாலேயே அவர் என்ன கூறுகிறாரோ, அதனையே ஆங்காங்கும் எடுத்துச் சென்று கொட்டித் திரும்புகின்றனர். கூலிக்கு மாரடிப்பவனின் ஒப்பாரத்தையும் ஒப்பாரியையும் அறிந்தோர்க்கு, இந்த 'அரசியல் எடுபிடி'களின் போக்கு நன்கு புரியும்.

இதனை, தி.மு.க. நன்றாக உணர்வதால்; இந்த 'அரசியல் எடுபிடி'களின், ஆர்ப்பரிப்பைக் கண்டு, நகைக்கிறது—நடந்து செல்கிறது, தன்பாதையில்.

இந்தப் பெருமித நடையைக் காணச் சகிக்க முடியவில்லை — ஆச்சாரியாரால். ஆரம்பத்தில், அலட்சியமெனும் அம்புகளை வீசிப்பார்த்தார்—எவ்வளவு பேசினும், தி.மு.க. எனும் பெயரைச் செப்பிடவே தம்பெயருக்கு இழுக்கு — என்று எண்ணினார். பிறகு கேலி செய்தார், 'அவர்களும் ஒரு விதத்தில் கடவுள்களைத் துதிப்பவர்களே!' — என்று. பின்னர் அலறிப் பார்த்தார் — 'ஐயோ! ஐயோ!! கடவுளைத் தாக்குகிறார்களே' என்று. பிறகு, தோலில் தடிப்புத் தென்பட்டது. அதைவிட அதிகமான 'தடிப்பு' அவர் திட்டி அனுப்பிய உத்திரவு ஓலைகளிலிருந்தன. அதனால் சிதறுண்டன, இறந்தன! பிணங்களாயினர், நம் தோழர்கள்! அலங்கோலக் காட்சிகள் அதிகமாயின! இத்தனையும் தாங்கி, புன்சிரிப்பு நடையோடும், நம்மைப் புயலாக்க நினைத்தார் — ஆடுகள் மோதும், குருதி வழியும், குடிக்கலாமென்றேங்கும் குள்ளநரி இவர் என்பதை நன்றாக உணரும் தி.மு.க. வினர், அதற்கேற்றபடி நடந்து வருகின்றனர். அதன் காரணமாகவே, இவர்மூலம் தயார் செய்யப்படும் அடியாட்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமெனும் ஆவலில், கருப்புக்கொடி காட்டுதலையும், ஆங்காங்கு நிறுத்த முன்வந்திருக்கின்றனர்—நம் தோழர்கள்.

இது. ஆச்சாரியாரின் உள்ளத்தை எரிமலையாக்குகிறது.

நெருக்கு வரும் விரோதியை, வீழ்த்த அஸ்திரங்கள் உண்டு அவரிடம்.

எனவே, அவர் வலைக்கு அகப்படாத காளையாக, மிளிர்கிறது தி.மு. கழகம்.

இதனைக் கண்டதும், அவர் இன்னொரு பாதை புக நினைக்கிறார். ஆனால், அது எவ்வளவு பிரசித்தி பெற்ற பாதை என்பதை நினைக்க மறந்துவிட்டார் அவர்.

அதனால்தான், ஆத்தூரில் பேசியபோது, அவர் ஓர் வார்த்தையைச் சிந்தியிருக்கிறார்.

"தமிழ்ப் படித்த பண்டிதர்களும் இவர்களிடம் வீழ்ந்துவிட்டார்கள்."

இந்தச் சொல்லையே, தான்பெற்ற 'பாக்யம்' எனக் கருதுகிறது, தி.மு. கழகம். இதே சொல்லைத்தான், அன்று சாக்ரடீஸ்மீது வீசினர், கிரேக்க பீடாதிபதிகள்! அதனையே, சென்னைப் பீடாதிபதி இன்று செப்புகிறார்!!

*

'மாணவர்களை, வலையில் போட்டுவிட்டார்கள்"

"படித்தோரை, கழகத்துக்குள், இழுத்துவிட்டார்கள்"

"பாமர மக்களின், உள்ளத்தை—எழுத்தாலும், பேச்சாலும் மயக்குகிறார்கள்"

"எதை யெடுத்தாலும் அவர்கள் தொட்டது பொன்னாகிறது! நினைத்தது வெற்றியாகிறது!!"

இவ்வண்ணம், தி.மு.க. வைப் பற்றி, எதிர்க்கட்சியினர், கூறி வந்தனர். இன்று, அவர்களில் முதலிடம் வகிக்கும் ஆச்சாரியார் கூறுகிறார்—"ஐயையோ! தமிழ்ப் பண்டிதர்களையும்—(உம் விளக்கம் அறிவீர்கள் நீங்கள்)—இழுத்து விட்டார்கள்", என்று. இது, தமிழ்ப் பண்டிதர் மாட்டு, ஆச்சாரியார் கொண்டிருந்த நம்பிக்கையின் அளவைக் காட்டுகிறது. "தமிழ்"—என்று சொன்னால், நீறுபூசியவன், பண்டிதராக இருப்பான்! அல்லது நாமதாரி, வித்வானாக விளங்குவான்!! இன்று, அந்தக் காட்சியைக் காண முடியவில்லை, எங்கும். காரணம், முன்னாள் பண்டிதர், ஆச்சாரியாரின் நண்பர் டி. கே. சிதம்பரநாதரைப் போன்றவர்கள், கம்பனின் காவிய ரசனையைவிட அவன் தரும் பக்திரசம் பலமடங்கு மேலெனக் கூறி 'முக்தி மார்க்கம் தேட முதல்வனைப் பணியும் வழி' என்று விழியாலும் மொழியாலும் வைதீகத்தை வளர்த்தனர், அந்தப் பண்டிதர்கள்—ஆனால், இந்நாள் புலவர் குழாமோ, புலமையை ரசிக்கிறது—ஆனால், புத்தியைக் கெடுக்கும் வகையில் குழைத்துத் தரப்பட்ட பக்தியின் அளவை வெறுக்கிறது இது, எத்தகைய கருத்துப்

புரட்சி என்பதை அறிகிறார்—ஆச்சாரியார்!

*

நீதி மன்றத்திலே நின்ற சாக்ரடீஸ் சிரித்தான்—தன்னுடைய சொல், பலரை மயக்கி, ஒரு அரசாங்கத்தை ஆட்டங்கொடுக்குமளவுக்குச் செய்துவிட்டது—என்று கேட்கும்போது.

ஆச்சாரியார் வீசும், குற்றச்சாட்டும், அதே போல இருக்கிறது—இங்கு.

"நாம் பண்டிதர்களையும் வசீகரித்து விட்டோமாம்!"—

எத்தகைய, பேரின்பம் தரக்கூடிய உண்மை, இது.

அதிலும், ஆண்டவன் புகழ்பாடி, அருள் நாடிக்கிடக்கும் தமிழ்ப் புலவர்களை, நமது பிரங்கிகளாக்கியிருக்கிறோம்—ஒத்துக் கொள்கிறார், ஆச்சாரியார்.

இதனை அவர் மொழிந்தது, நமது, வெற்றியை விளக்க அல்ல—அறிவோம்.

"ஐயயோ!" இந்த தி. மு. க. வைப் பாருங்கள். எல்லோரையும், வசீகரித்து மயக்கி வருகிறார்கள். விதைவிடலாமோ? என் கையைப் பலமாக்குவீர்! இவர்களை அழித்து ஒழிக்கிறேன்!" என்று தூண்டவும்,

"ஊம்! நீங்களெல்லாம் அந்தக் கூட்டத்திலா இருக்கிறீர்கள். உங்களையெல்லாம் என்ன பாடுபடச் செய்கிறோம், பாருங்கள்!" என்று மிரட்டவும், மேற்குறிப்பிட்டவாறு மொழிந்திருக்கிறார்.

அறிவோம், நாம். ஆயினும், அவர் உதிர்த்த சொல், நம் உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது.

நாம் வசீகரிக்கிறோம்!—எவ்வளவு அரிய சொல் இது. இளைஞர்களை—அனைவர்களை—மகளிரை—தொழிலாளரை—பக்தியில் திளைத்த பண்டிதர் குழாமை—எல்லாம், நாம் அவர்கள் மொழிப்படி—மயக்குகிறோம்.

"சூ! மந்திரக்காளி—ஓடிவா!"

"இந்த லேகியம், அருமையானது. இந்தா சாப்பிடு"

இத்தகைய முறைகளாலா!—அல்ல, அல்ல, நம்முடைய எண்ணங்களால்!!

அதுவும், எத்தகைய உலகில்..... பெரும் கட்சியெனப் போற்றப்படும் காங்கிரசும், மற்றக்கட்சிகளும் உலவும் நேரத்தில்—பணத் தோட்டங்களான பாங்கிகள் 'இந்து' சீனிவாசனிடமும், 'மித்திரன்' சீனிவாசனிடமும் அடைக்கலம் புகுந்து கிடக்கிற சமயத்தில்—ஏராளமான பத்திரிகைகள் நம்மை எதிர்த்துத் தாக்கும் திருப்பணியிலீடுபட்டிருக்கிற சமயத்தில்—இந்தக்குகைகளையெல்லாம் தாண்டி, நம் 'சொல்' பாய்கிறது! 'நம் எழுத்து' அவர்களை இழுத்து வருகிறது!!

இதனை, ஆச்சாரியாரே, ஒப்புக்கொள்கிறார்.

தமிழ்ப் புலவர்களைக் காட்டிச் சொல்லுகிறார்.

தமிழ்ப் புலவர்களைக் காட்டி, இதனை, அவர் தெரிவித்திருப்பது, மிக மிகக் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

ஏனெனில், சமீபகாலத்தில், ஆச்சாரியார் நம்முடைய தோழர்கள் தீட்டும் ஏடுகளையும் நூல்களையும், மிகவும் கவனமாகப் படித்து வருவதாகக் கேள்விப்பட்டு வந்தோம்.

அதன்பலன்தான், அவர் இவ்வாறு பேசுவது.

நம்முடைய நூல்கள்—அவரிடம் கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டன.

நமது நூல்களின் நடை—அவருக்குப், பூகம்பமாகத் தோன்றுகிறது.

நம் தோழர்கள் மேடையில் கையாளும் தமிழ்—அவருக்கு, எரிமலையாகக் காட்சியளிக்கிறது

தமிழ் இன்று, நமக்கோர் வாள்! நல்லதோர் கேடயம்!!

இந்தத் தமிழை, புதிய முறையில், எளிய வழியில், நுழையா இடமெல்லாம் நுழையும் வகையில், நம்முடைய சகாப்தம் செய்துவருகிறது.

தமிழுக்கோர், தனிநடை தந்தார், நம் தளபதி! அந்த அறிவு விளக்கின் ஒளி, எங்கும் பரவுகிறது!!

இத்தமிழ் மணம்—மாற்றாருக்கு, கிடைக்க முடியாது.

அவர்களின் தமிழ் ஏடுகள், தவிக்கின்றன.

இத்தவிப்பு—அவர்கள் மேடையில் பேசும்போதும், ஏடுகளில் எழுதும்போதும், தென்படுகின்றது.

இது சாதாரணமானதா!—நிச்சயமாக, இல்லை.

நம்மை அழிக்கவிரும்பி; தடைகளை வீசி, சிறைக்கூள் பூட்டினாலும் "நாம்"—தமிழகத்தில், அழியமாட்டோம். அத்தகைய சக்தியாக மாறிவிட்டோம்.

அதன் விளைவும், அது தரும் வளர்ச்சியும் எத்தகையதென்பதை, பழைமையின் பாதுகாவலர்—வைதிகத்தின் சாமரம்வீசி—ஆச்சாரியார், நன்குக உணர்கிறார்.

ஆகவே, அங்கலாய்க்கிறார்—தமிழ்ப் புலவர்களும் அவர்களிடம் மயங்கிவிட்டார்களே, என்று.

*

நாட்டின், மூலை முடுக்குகளிலெல்லாம், நம் குரல் கேட்கிறது.

நமது எண்ணங்கள், எழுச்சி முரசு கொட்டுகின்றன.

இதனைக் காணும் அவர்கள், எரிச்சல் சகிக்காமல்—இந்நாள்வரை, பலப்பல கூறினர். 'மயங்காதீர்'—'வலையில் விழாதீர்'—'உங்களை மயக்கிவிடுவார்கள்'—இவ்விதமெல்லாம் இன்று, அவர்கள்தம் தலைவர், ஆச்சாரியாரே கூறுகிறார்—நாம் வசீகரிக்கிறோமாம்!

ஆகா!—எவ்வளவு அருமையான 'பரிசை'ப் பெறுகிறோம், நாம்.

ஆச்சாரியாருக்கு, 'சாக்ரடீசின்' வாழ்க்கையில், மிகுந்த பற்றுதல் உண்டாம். அதன் காரணமாகவே, 'சோக்ரதர்' என்றோர் நூலையும் எழுதியுள்ளார், அவர்.

ஆகவே, நன்குக அறிவார்—இன்று அவர் கூறும் இதே குற்றச்சாட்டைத்தான், அன்றோர் நாள், கிரேக்க மன்றம், சாக்ரடீஸ்மீது சுமத்தியது.

அது, அந்த நூற்றாண்டில்!—சுமத்தியது, கிரேக்க நீதி மன்றம்!!

நாம் வாழ்வதோ, இருபதாம் நூற்றாண்டில்!—இப்போது குற்றம் சுமத்துவது, வைதிகத் தலைவர்!!

எனவே, இந்தக் குற்றச்சாட்டைப் 'பாக்யம்' என்றே கருதுகிறோம்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்காகிய சாக்ரடீசின் பெயர், இன்றும் ஒளி விளக்காயிருக்கிறது.

இதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தண்டனைகளை அனுபவிக்கும் நம்மையும், எதிர்காலம், இவ்விதமே கூறும்.

புதுமை விரும்பிகளுக்கு, இந்தக் குற்றச்சாட்டு, ஓர் செந்தேன்!

தருகிறார்—இந்த வைதீகபுரியினர். வரவேற்போம்.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 1—11—53 [ஞாயிறு

தோழர்காள், கையேந்துகிறோம்!

'ஆத்திரக்காரர்களை' சிருஷ்டித்து, அதன் மூலம் ஆட்சி ரதத்தை, ஓட்டிச் செல்லும் வேலையில் முனைந்து நிற்கிறார், ஆச்சாரியார்.

இதன் முதல் திட்டம், தி. மு. க. தலைவர்கள் சிறையில் கிடக்கும் இந்நேரத்தில், கழகத் தோழர்கள் மீது காங்கிரஸ் 'ஆத்திரக்காரர்'களை ஏவி விடுவதென்பது.

இதனாலேயே, கருப்புக் கொடி காட்டப்படும் இடங்களிலெல்லாம் அடியாட்களைப்பிடித்துவந்து கதர்க்கொடி கொடுத்து, நம்மவர்களைத் தாக்கும் வேலை, ஒரு பக்கம் அவர்தம் குழாத்தால் தூண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் 'குருக்ஷேத்ரம்' காண்பதில், அவருக்குச் சிறிதும் நட்டமில்லை—லாபம் கிடைக்குமெனவும், எதிர்பார்க்கிறார்.

ஆனால் அவரது 'சதி'யை அறியாத தேசியத் திராவிடச் சகோதரர்களோ, அடியாட்களைத்தயாரிப்பதும், கதர்க்கொடி தேடுவதும் கலவரங்களை விளைவிப்பதுமே, இன்றைய 'சுதந்திரப்போர்' என்று கருதுகிறார்கள்—ஆர்வம், ஆச்சாரியாரால், பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இதனால், தமிழ் மண்ணில் ஓடும் குருதி, நம்முடையதே ஒழிய, அவரைச் சேர்ந்தோரதல்ல!

இதனை, வளர்ப்பதென்பது, நமது நோக்கமல்ல — இது வளர்வது, விபரீதம் உருவாக வழி செய்யுமேயொழிய, நம் இலட்சியத்துக்கு எவ்வித உதவியும் செய்யாது.

எனவே, கிளைக் கழகத் தோழர்களைப் பணிவன்போடு வேண்டிக் கொள்ளுகிறோம். இது நாள் வரை, ஆங்காங்கும், உலவவந்த ஆச்சாரியாருக்கும்—கவர்னருக்கும் பிறருக்கும், கருப்புக் கொடி காட்டியது போதும். இனி, வேண்டாம்.

தலைவர்களைச் சிறையில் தள்ளிய ஆத்திரத்தாலும், ஆச்சாரியார் தர்பார் நடத்திவரும் கோரங்களைக் காணச் சகியாததாலும், நமது எதிர்ப்பைக் காட்ட, ஒவ்வோர் ஊரிலும் கருப்புக் கொடி காட்டி, கழக முழக்கத்தை எழுப்பியது போதும்—இனி, வேண்டாம். தலைவர்கள் வெளியில் வந்ததும், அவர்கள் அனுமதித்தால், மீண்டும் துவங்கலாம்.

தலைவர்கள் சிறையில் கிடக்கும் இந்நேரத்தில், மக்களிடம் வளர்ந்திருக்கும், ஆத்திரம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே, இந்த வேண்டுகோள், சிறிது கசப்பாகவும் தென்படலாம். ஆனால், ஆச்சாரியார், அரசியல்வானில் இருள் பரவினால், தன்சுயநலக் கொள்கையைச் சுகமாக நடத்தலாம் என்று கருதுகிறார். இந்தச் சூதுமதிக்கு, நாம் இடந்தரக்கூடாது. கடுகை மலையாக்கும் காரியவாதி அவர். தலைவர்களில்லா நேரத்தில், சுழகத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்பேற்றிருக்கும் நாம், ஆச்சாரியாரின் விஷமத்துக்கு, இடந்தரக்கூடாது. அதிலும் காங்கிரசிலேயே 'உள்போர்' நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில்,—இத்தகைய விஷமத்தால், லாபம் பெறலாம் என்றும் கருதுகிறார். இந்த ஆசையை ஒடித்தெறிவது, மிக மிக முக்கியமாகும். எனவேதான், 'இனி வேண்டாம்!' எனும் வேண்டுகோளை, எல்லாத் தோழர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்

ஆச்சாரியாரின் கொடுமையாலும் காங்கிரஸ் பாசீசத்தின் கோரதர்த்தனத்தாலும், வெதும்பிக்கிடக்கும் கழகத் தோழர்கள்; தம்முடைய ஆர்வத்துக்கு, அணை போடுவதாகக் கருதக்கூடாது. அந்த ஆர்வத்தைத் திருப்பிவிடும், வேறு சில பணிகளும், நமக்கிருக்கின்றன.

சிறையில் தலைவர்கள் கிடக்கும்
இந்நேரத்தில், திருச்சியில் கல்லக்
குடி வழக்கின் 'தீர்ப்பு' — நமது
நமது தோழர்களை எதிர்பார்த்த
வண்ணமிருக்கிறது. நமது தோழர்
களுக்கு என்ன தண்டனை கிடைக்
குமோ, தெரியவில்லை. தூத்துக்குடி
யிலே, மாபெரும் வழக்கு துவக்
கப்பட்டிருக்கிறது—நமது தோழர்
கள்மீது. 16 செக்ஷன்கள்! குற்றப்
பட்டியல் 96! சர்க்கார் தரப்புசாட்சி
யங்கள் 91! — இவ்வளவு பெரிய
வழக்கை நம்மீது, ஆச்சாரியார் சர்
கார் வீசியிருப்பதோடு எப்படியு
வது பழிவாங்குவதென்றும் கங்
கணம் கட்டிக்கொண்டிருக்கிறது.

இந்த மாபெரும் விபத்திலிருந்
நமது அருந்தோழர்களை நாம் எப்ப
டியும், காப்பாற்ற வேண்டும். நீ
மன்றத்தில், ஆச்சாரியாரின் எதே
சாதிகாரத்தை அம்பலப்படுத்
நமக்குள்ள வசதிகள் மிக மிக
கொஞ்சம். பணம்-கழக வீரர்கள்
கிய நீங்கள்தான்! நம்மிடம் 'இந்
இல்லை—கோயங்கா இல்லை—கல்
இல்லை. அறிவோம். ஆயினும், நீ
பெற்றாக வேண்டும். அகப்பட்
கொண்டிருக்கும் நமது தோழ
களோ, நூற்றுக்கு மேற்பட்டோ
வீசப்பட்டிருக்கும் குற்றங்களோ
கர்ணகடூரமானவை! இந்த விபத்
லிருந்து நமது கண்மணிகளைக் கா
பாற்றவேண்டும். வக்கீல்கள் அ
வர், முன்வந்துள்ளனர்! வழக்கி
செலவைக் கணக்கிட்டாலோ, பெ
மூச்சு வருகிறது. ஆயிரக்கணக்கி
தேவைப்படுகிறது. தலைவர்களோ
உள்ளே! நாம்தான் வெளியே!!

எனவே, இந்த நேரத்தில் கழ
ஆர்வத்தையும் வேகத்தையும்,
தப்பணிக்கு உதவும் நோக்கத்
காகத் திருப்பிவிட வேண்டும்.
னைச் செய்யுமாறு, கழகத் தோ
கள், ஒவ்வொருவரையும் வேண்
கிறோம். நீங்கள் அனுப்பும்
தொகை — நிரபராதிகளான
சகோதரர்களின் குடும்பவிளக்
எரியச்செய்யும், புனிதமான இ
சியத்துக்காகும். இதனை, ம
ணுங்கள்.

அதோடு, வரும் நவம்பர் மு
வாரம் நாடெங்கும் தூத்துக்
நாள் அனுஷ்டித்து, பொதுமக்
டம் நிலையை விளக்குங்கள். தின
கள் தோறும், இப்பிரசாரம் ந
கட்டும். ஒவ்வொரு வீட்

அவரது பணி—நமது இலாபம்!

[வாணன்]

நேரு பண்டிதர் சென்னைவந்து போனதிலிருந்து, திராவிடத்தின் அரசியல் அரங்கத்திலே புதிய தொரு கட்டம் உருவாகி இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேகமான வளர்ச்சியைக் கண்டு, கிலி கொண்டுள்ள பழைமை விரும்பிகள் அத்தனை பேரும், இனி இதை ஒழிக்க வழி என்ன என்று ஆராய்வதிலேயே முனைந்துவிட்டனர்.

"ஆசிய ஜோதி" தனக்கு இருக்கும் ஆயிரக்கணக்கான அலுவல்களுக்கிடையே, அக்கரையோடு தெற்கேவந்து, தன்னைத் தட்டிப் பேசக்கூடியவர்களும் இருக்கின்றனரே என்ற ஆத்திரத்தில், சந்து முனை சிந்து பாடிவிட்டுப் போனார்.

அவரைத் தொடர்ந்து, அவருடைய ஆணையில் பிரதமர் பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்ட ஆச்சாரியாரும், அவர் உண்டாக்கி நாட்டிலே உலவ அனுப்பித்து இருக்கும் ஆழ்வாராதிகளும், அனுமார்களும், நாடெங்கனும் சுற்றி, திராவிட இயக்கத்தைத் தாக்கும் பணியில் சென்ற இரண்டு வார காலமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

திராவிடத்திலே, நடத்தப்பட்ட கிளர்ச்சியை, கேலி செய்து இழி மொழி பேசிய பண்டிதரைக் கண்டிக்கும் அடையாளமாக ஒரு பகல் பூராவும் தமிழ் நாட்டின் ரயில்களை நிறுத்திக் காண்பித்தோம்.

'கல்லக்குடி' என்ற அழகிய தமிழ்ச் சொல்லோடு திகழவேண்டிய கிராமத்திற்கு, 'டால்மியாபுரம்' என்ற வடநாட்டு முதலாளியின் பெயர் ஏன் என்று போராட ஆரம்பித்தோம்.

"குலதர்மத்தை நிலைநாட்டவகை செய்யும் இந்தப் புதியக் கல்வித் திட்டம் வேண்டாம்" என்று கூக்குரல் எழுப்பினோம்.

இந்த முயற்சிகளில் நாம் அடைந்த, அடைந்துவரும் மகத்தான வெற்றி, நமக்கு நாட்டு மக்களிடத்தில் இருக்கும் தொடர்பைக் காட்டுவதோடு, நாடு நம் வழி செல்லத் தயாராகிவிட்டதையும் காட்டுகிறது.

இந்த வெற்றி முழக்கம் கேட்ட பண்டிதரும், ஆச்சாரியாரும், அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கும் மிக உயர்ந்த இடத்திலிருந்து மகாமட்டமான இடத்திற்கு வந்துவிட்டனர் என்பதைத்தான், சென்ற சில நாட்களாக நடந்து வரும் பவனிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

ஆந்திராவிற்கு வந்த நேருபண்டிதர், ஆத்திரத்தோடு சென்னை வந்து, அவர் வாயில் வந்ததையெல்லாம் பேசித் தீர்த்தார். அவர் பேசியதிலே, நமக்கு ஏதோ குறைவு வந்துவிட்டதாக சிலர் கூறிப் பார்க்கின்றனர்.

"நேரு என்றால் எப்பேர்ப்பட்டவர் என்றுதான் உங்களுக்குத் தெரியுமே—அவர் பாசிச வெறியரன்றோ? அப்படித்தானே பேசுவார்! பின் ஏனப்பா அவர் கூறியதற்கு ரயிலை நிறுத்தினீர்கள்?" என்று நம்மீது வஞ்சையுடன் கூறுவது போல் எழுதிக் காண்பிக்கின்றனர்.

அவர்களே அடுத்த வரியில் "நேரு வந்தார் — ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் பரிதாப நிலைமை விளக்கவில்லை! ஆகவே உலகபாட்டாளி மக்களை ஒன்று சேருங்கள்" என்று எழுதுகின்றனர்.

நாம் எதிர்க்கும்பொழுது, நேரு பண்டிதரின் உண்மை சொரூபம் நமக்குத் தெரியவில்லையாம்! அவர்கள் எதிர்க்கும் பொழுது மாத்திரம் பண்டிதர், பாட்டாளிகளுக்குக் கடமைப்பட்டவராகிவிடுகிறார்.

அரசியல் நாட்டியம் ஆடத்தெரியாமல், கோணல் எங்கே என்று தேடும் பரிதாபத்திற்குரிய இவர்கள் ஒருபுறமிருக்க, சென்னைவந்த நேரு பண்டிதர், சென்னையைவிட்டுப் போகும்போது எந்த நிலையிலே சென்றார் என்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

சென்னை, மதுரை, கோவை மூன்று மாவட்டங்களிலும் அவர் கண்ட கருப்புக் கொடிகள், அவருடைய உண்மை சொரூபத்தை நாட்டு மக்களுக்கு நன்கு விளக்கிற்று.

நாட்டிலே இருக்கும் குற்றம் குறைகளை தேடிக் கண்டுபிடித்து, மக்கள் தேவையை பூர்த்தி செய்பவன்தான் உண்மையான அரசியல்வாதி என்றான், ஆங்கிலப் பேராசிரியன் ஒருவன்.

சென்னை வந்த பண்டிதர், நாட்டில் இருக்கும் குற்றம் குறைகளையா கண்டு பிடித்தார்? மக்கள் தேவைக்கான வழிவகையா தேடினார்?

இவைகளைச் செய்யாததுமாத்திரமில்லை. இவைகளைச் செய்ய வேண்டும் என்று, கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் போராடிய மக்கள் ஊழியர்களைப் புறக்கணித்து,

சென்று, விஷயத்தைச் சொல்லி, 'தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கு' என்று ஒவ்வொருவரிடமும் கையெழுத்துவாங்கி, சென்னை முதலமைச்சராகப் பதவி வகிக்கும் ஆச்சாரியாருக்கு அனுப்பிவையுங்கள். பலன்தருமா?—சந்தேகம், வரலாம். பலனல்ல—இதில் பயன் நிரம்பிய எதிர்கால எண்ணங்கள், பொதிந்துள்ளன. இந்தக் காரியத்துக்கு ஆங்காங்குமுள்ள M.L.A-க்கள், பஞ்சாயத்துபோர்டுகள், நகரசபை உறுப்பினர்கள் ஆகியோரின் கடிதங்களையும் பெற்று, கடிதமூலம் ஆச்சாரியாருக்கு அனுப்புங்கள். அவர், முகவரி:- "முதலமைச்சர்—அரசாங்க மாளிகை — செயிண்ட் ஜார்ஜ் கோட்டை — சென்னை 9" என்பதாகும்.

கழகத் தோழர்களே! கண்ணியமே கட்டுப்பாடெனக் கொண்டோரே! சிறையில் கிடக்கும் நம் நம் செல்வங்களின் சிந்தை குளிரச் செய்வோம், நாம் செயல் திறனைக் காட்டுவோம்!!

✲

இழிமொழி பேசிவிட்டுப் போனார். பண்டிதரின் பெருமையை நாற்பதாண்டுகளாக மெருகேற்றி வந்த தேசியத் தோழர்கள், இந்தப் பேச்சால் கொஞ்சம் மகிழ்ந்துமிருப்பர். ஆனால், பாவம், அவர்களறியார்— இந்தப் பேச்சால், நேரு பண்டிதர் மக்கள் கண் முன் எந்தளவு இறங்கி விட்டார் என்று. திராவிட சமுதாயத்திலே, இனி எந்த முகத்தைக் காட்டிக் கொண்டு வரமுடியும் என்று நினைக்கிறீர்கள்?

ஏனப்பா தவறு செய்தாய்; என்றால் தெரியாமற் செய்தேன் என்பது நேரடியான முறை.

இல்லை, இனி சரியாய்ச் செய்கிறேன், என்றும் கூறலாம். இன்னும் எப்படி, எப்படியோ கூறலாம், நேர்மையோடு இருக்க நினைத்தால்.

அப்படிக்கில்லாமல், அரசியல், ஆணவமும், சூன்யமும் ஒன்றானால் "நான் இதையும் சொல்வேன்; இன்னமும் சொல்வேன்" என்று தான் கூறத் தோன்றும். அப்படிக் கூறுவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அப்படிக் கூறுபவர்களை, பின்னால் வரும் தீங்கை, முன்னாலேயே தெரிந்து கொள்ளாதவர் என்றுதான் அரசியல் அரிச்சுவடி கூறும்.

நேரு பண்டிதரின் ஆத்திர உரைகளுக்குப் பிறகு, திராவிடத்தின் அரசியலில் ஏற்பட்ட மாறுதல்கள் தான் நாம் கவனிக்க வேண்டியது.

நேரு துந்துபி முழங்கினார். தம் பட்டம் தூக்கிப் பின்னால் டறப்பட்டிருக்கின்றனர், அவருக்காக இந்தப் பகுதியை ஆளும் பெரிய மனிதர்கள்!

கோவை, சேலம் மாவட்டங்களில், ஆச்சாரியார் துடுக்குத்தனத்தோடு வார்த்தைகளை வீசி இருக்கின்றார்.

தஞ்சையிலே பவனிவந்த ஸ்ரீ பிரகாசா, தென்னாட்டின் அரசியல் வரலாற்றை அதிகமாகத் தெரிந்தவர் போல, தன் பதவிக்குத் தகாத வார்த்தைகளை அள்ளி வீசி இருக்கிறார்.

இதே மாதிரி மந்திரிகள் சுப்பிரமணியம், ராஜாராம் நாயுடு, பக்தவத்ஸலம் முதலியோரும் சென்னை, கோவை முதலிய ஊர்களில் திராவிட இயக்கத்தைத் தாக்கிப் பேசி இருக்கின்றனர்.

அதிகாரத்தில் ஏறியவர்கள், ஏதோ பேசி விட்டார்கள் என்றவுடன், அவர்களை அண்டி நிற்கும் அரசியல் அனாதைகளும் ஊர் ஊராக, திராவிட இயக்கத்தைத் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. இது தான் சமயமென்று குன்றக்குடியும், கோல் தூக்கும் மற்ற வைதீகப் பாதுகாவலர்களும், அதிதீவிரப் பிரச்சாரத்தில் இறங்கி விட்டனர்.

*

அரசியலிலே, குறித்த நோக்கத்தை அடையும் மார்க்கங்கள் பல உண்டு. நேரடியாக போராடுதல், இரகசியமாக போர்ப்படை சேர்ப்பது என்பவைகள் ஒரு புறமிருக்க, தோற்கடிக்க வேண்டிய எதிரியில் யார் முதல்வன், யார் பின்னவன்; எதிரியை எப்படி எப்படித் தோற்கடிப்பது என்ற பல பிரச்னைகள் இருக்கின்றன.

காலனி நாடுகளில் சுதந்திரப் போராட்டம் முதற்கட்டம்.

ஆனால் அதோடுசமுதாயப்புரட்சியும் செய்து, வரப்போகின்ற சுதந்திரத்தைக்கட்டியாளும்பொறுப்பிற்கு, மக்களையும் தயார் செய்ய வேண்டியதும், அடிமைப்பட்ட நாடுகளின் வரலாற்றை அறிந்தவர்கள் கடமையாகும்.

சென்ற உலக யுத்தம் ஆரம்பமானவுடனேயே, ஹிட்லரை முறியடித்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், தானே பலவீனமடைந்து, காலனி நாடுகளுக்கு சுதந்திரம் தந்துவிட வேண்டிய நிலைக்குவந்துவிடும் என்பதை உலக அறிவாளிகள் எல்லோரும் கண்டுகொண்டனர். அவர்கள் ஆராய்ச்சியுரை உண்மையானது, என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

சுதந்திரப் போராட்டங்களில் அடித்தளத்திலே கிடந்த மலேயா, பர்மா, சிலோன் முதலிய நாடுகள் கூட சுதந்திரமடைந்தன.

இந்திய உபகண்டத்திலே தயாராகக் காத்துக் கொண்டிருந்த ஜின்னா, பாகிஸ்தான் பெற்றார்.

காங்கிரஸ்காரர்கள், சுதந்திர இந்தியாவிற்கு பாதுகாவலராயினர்.

இவைகள், கண்கூடாக சென்ற பத்து ஆண்டுகளில் நாம் கண்டவை.

போர் முடிந்தவுடன் நிச்சயமாக சுதந்திரம் கிட்டும் என்று தெரிந்திருந்தும், 1942ல் காங்கிரஸ் பெரும் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

நாட்டிலே, 'சுதந்திரப் போராட்டம்' என்று பெயர். ஆனால் அரசியல் ஆய்வுச்சாலையிலே வைத்துப் பார்த்தால் அதன் உண்மைச்சொரூபம் நமக்குத் தெரியும்.

1942-ல் வடஇந்தியாவிலே ஹிந்து மகாசபை வளர்ந்து வந்து கொண்டிருந்தது. ஜின்னாவோடு நேர் எதிராக உட்கார்ந்து பேச காந்தியார் சம்மதிக்காவிட்டால், அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஹிந்து மகாசபைக்கும், முஸ்லீம் லீகுக்கும் நாட்டைப் பிரித்துக் கொடுத்து விடுவது என்று பிரிட்டிஷார் முயற்சி செய்து கொண்டிருந்தனர். இந்தக் காரணத்தினாலே, இந்து மகாசபைக்கும், மற்ற ஜாதியக்கட்சிகளுக்கும் பிரிட்டிஷாரின் மறைமுகமான உதவி கிடைத்த வண்ணமிருந்தது. இதே நேரத்திலே, கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷியலிஸ்ட் கட்சியும் நாட்டிலே வேரூன்றிக்கொண்டிருந்த நேரம்.

திராவிடத்திலே, இந்தி எதிர்ப்புப்போராட்டத்திலே, வெற்றிக் கொடி நாட்டியவண்ணம் நாடுசுற்றிக்கொண்டிருந்தனர், திராவிடத் தலைவர்கள். ஆச்சாரியார் மந்திரி சபை ராஜினாமா செய்தபின், வடநாட்டில் செய்ததை திராவிடத்திலும் செய்து, ஆளும் பொறுப்பை திராவிட இயக்கத்திடம் கொடுத்து விடத் தயாராயிருந்தனர், பிரிட்டிஷார். இருந்தாலும், திராவிடத்தின் அடிப்படைப் பிரச்னைகளிலே ஈடுபட்டு, மக்களை அறிவுத் துறையிலே இழுத்துச் செல்லும் பெரும் பணியை செய்து கொண்டிருந்த திராவிடத் தலைவர்கள் ஆட்சிப் பீடத்தில் மக்களால் தேர்ந்தெடுக்காததின் முன்னம், அமர மறுத்து, தங்கள் ஆக்க வேலையைப் பார்க்கப் போயினர்.

இதையெல்லாம்கண்ட காங்கிரஸ் மேலிடத்திற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

கதரையும், காட்டுமிராண்டிக் காலத்துக் கைத்தொழில் திட்டங்களையும் வைத்துக்கொண்டு மாறிக் கொண்டிருக்கும் உலகத்தில் நிற்க முடியாதென்று அவர்களுக்கு நன்றாகத் தெரிந்தது. மக்களுடைய உள்ளத்தை சீர் திருத்தும் சமுதாயப் புரட்சியிலே அவர்கள் கை வைக்கமுடியாதவாறு, வைதீகர்களால் காங்கிரஸ் தலைமைப் பீடம்

முடிக்கிடந்தது. பொருளாதார சமத்துவம் பேச முடியாதவாறு, காந்தியார் பக்கத்தில் முதலாளிகள் நின்றனர். இதே நிலைமை நீடித்துக் கொண்டுபோனால், காத்துக்கிடந்தும், வந்த சுதந்திரம் வேறு யவர் கையில் போய்ச் சேருமோ என்ற பயம் அதிகமாகியது. இந்த அரசியல் காரணங்களில்தான் 1943 ஆகஸ்ட் போராட்டத் தீர்மானம் நிறைவேறியது.

ஏதோ செய்து, நாட்டில்மாற்றுக் கட்சிகளை ஒழித்துக்கட்டவேண்டும்! இந்த ஒரே நோக்கத்தில்தான், ரயில்கள் கவிழ்க்கப்பட்டன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தபாலாபீஸ்கள் கொளுத்தப்பட்டன!

இந்தப் போராட்டத்தின்போதுகூட, நாம் பெருநோக்குடனேயே நடந்துகொண்டோம்.

எது செய்தபோதிலும், நாட்டின் அரசியல்வாதிகளை பிடித்துவைக்க பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு கொஞ்சம்கூட யோக்கியதை இல்லையென்று கூறினோம். தீர்மானங்கள் நிறைவேற்றினோம். கண்டித்து எழுதினோம்.

1947 ஆகஸ்டில் சுதந்திரம் வந்தது. ஆம், யாரும் அழைத்தோ, இழுத்தோ வரவில்லை! வந்தது. 1942-ல் போட்டத் திட்டத்தின் பலனாக, பிரிட்டிஷார், காங்கிரஸிடமே இந்தியத் துணைக்கண்டத்தை ஒப்புவித்துப் போயினர்.

இந்திய உபகண்டம், காலனி ஸ்தானத்திலிருந்து, டில்லி அரசின் கீழ் வருவது, நமது விடுதலைப் போராட்டத்தில், ஒரு படிக்கட்டைத் தாண்டுவதற்கு ஒப்பாகும் என்ற காரணத்தால், மகிழ்ச்சியோடு சுதந்திர தினம் கொண்டாடினோம்.

இருந்தும், கூறினாராம் ஆச்சாரியார்; நாமெல்லாம் பிரிட்டிஷார் போனது கண்டு; வருத்தப்பட்டவர்கள் என்று.

"இரண்டாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடக்கும் எங்கள் நாட்டை, விடுதலையடையச் செய்யும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் எங்களை, அடிமை விரும்பிகள் என்று கூறுகிறாயா?" என்று ஆத்திரத்தோடு கேட்கத் தோன்றும்.

சிலோனில், செருக்கோடு நடக்கும் பிரதமரும், கறுப்பனை நாட்டைவிட்டே துரத்தும் மலானும், கறுப்பனை நாட்டிலுள்ளோரேயே விட மறுக்கும் மென்ஸிஸூம் கூடும் காமன்வெல்த் மாநாட்டிலே, வெள்ளையனையும் அவன் ஆதிக்கத்தையும் அடியோடு வெறுப்பதாகக் கூறிக்கொள்ளும் இந்த ஆச்சாரியார் குழுவுக்கு என்ன வேலை?

இப்படி ஒன்றிரண்டல்ல. ஆச்சாரியார், நம்மைப் பார்த்து வார்த்தையின் மதிப்புத் தெரியாமல் கூறிவிட்டார். காங்கிரஸ் எந்தளவு தேசியம் பேசியது, எந்தளவு அடங்கி அடிமையாயிருக்கிறது என்பதை, வரலாறு தெரிந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வெறும் தேசியச் சுதந்திரத்தை மாத்திரம் கொள்கையாக வைத்துக் கொண்டிருந்துவிட்டு, இன்று மேற்கொண்டு அரசியல் கொள்கைகள் சூன்யமாகிவிட்ட காரணத்தால், ஏதேதோ பிதற்றுகின்றனர், ஆச்சாரியார் கூட்டத்தினர்.

கொஞ்சநேரம் சிந்தித்துப் பாருங்கள். வெறும் சர்க்காவையும் தக்ளியையும் வைத்துக்கொண்டு நாற்பதாண்டுகள் பிரச்சாரம் செய்தனர். இன்று சுதந்திரம்வந்தபின், பிரிட்டிஷார் தயார் செய்துவிட்டுப்போன சக்திவாய்ந்த அதிகாரிகள் கூறும் திட்டங்களைத் தூக்கிக்கொண்டு நாட்டிற்கு வந்து, "பாரீர், இந்தத் திட்டங்களின் பெருமையை, வாரீர் இவைகளை நிறைவேற்ற!" என்று கூறுகின்றனரே, இதன் அர்த்தம் என்ன?

அதிகாரமெல்லாம் இவர்கள் கையில் இருக்கும்போது, போடுவதுதானே ஒரு உத்திரவு; "இனிமேல் எல்லோரும் வேதகால முறைப்படி நடக்கவேண்டும்!" என்று.

இப்படியும், இன்னும் இவர்கள் கூட்டங்களில் போய் சொல்லிவரும் பழங்காலக் கொள்கைகளை நடைமுறையில் செய்துபார்ப்பதுதானே!

ஆனால், அவர்கள் கூறுவது எதையும் வாழ்க்கையில் அனுஷ்டிப்பதில்லை.

*

ஒன்றுக்கொன்று முரணான வாதங்கள்—செயல்கள். மொத்தத்தில், இவைகளெல்லாம்காங்கிரசுக்கு சுதந்திரம்வந்தபின் கொள்கைச்சூன்யம் ஏற்பட்டதையே தெளிவுப்படுத்துகின்றன.

நேர்மையானமுறையில் அரசியல் நடத்தவேண்டுமானால், சுதந்திரம் வந்தபின், பொருளாதார ஏற்றத்தாழ்வினை ஒழித்த, பேதா பேதமற்ற சமுதாயத்தைத்தான் உருவாக்க எந்த அரசியல் கட்சியும் முனைந்திருக்கவேண்டும்.

ஆனால், அதைச் செய்ய, நாட்டில் பலம் வாய்ந்திருக்கும் முதலாளித்துவத்தையும், சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் மேல் ஜாதியினரையும் எதிர்த்தாகவேண்டும்.

இந்த இரண்டையும் காங்கிரஸ் செய்யாததுமட்டுமல்ல, செய்ய முடியாதவாறு காங்கிரசே அவர்கள் கூடாரமாகிவிட்டது!

ஆகவேதான், மிகத் தீவிரமான முறையில், இன்று காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், ஆச்சாரியார் பழைமையையும், வைதீகத்தையும் காப்பாற்றும் பணியில் இறங்கிவிட முடிகிறது.

காங்கிரஸ் செய்யத் தவறியதை சென்ற கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக செய்துவரும் திராவிட இயக்கத்தினர் வளருவதைக் கண்டால், கோபம் வருகிறது, ஆச்சாரியாருக்கு.

அரசியலிலே ஆத்திரம், அறிவுச் சூன்யத்திற்கு அடையாளம்.

"நாங்கள் பதவிக்கு வந்துவிட்டோம்; இதைக் கண்டு எதிரிகளுக்குப் பொறாமை" என்கிறார், அற்பத்தனமாக.

அரசியல் வாழ்விலே இலாபம் வரும் என்று நம்பி இறங்கியவர்கள் நாமில்லை என்று, நாம் விளக்க அவசியமில்லை.

பதவியிலிருப்பதைக் கண்டு, யார் யாரைப் பார்த்துப் பொறாமைப்பட முடியும். ரூஸோவின் காலத்திற்குப் பிறகு, பதவியில் இருப்பதில் ஒருவருக்கொருவர் பொறாமைப் படவேண்டிய அவசியமில்லை. ஐந்து ஆண்டிற்கு ஒருமுறை, மக்கள், தங்கள் ஆட்சியை வாங்கி, மறுபடியும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் கையில் அதிகாரத்தைக் கொடுப்பதுதானே ஜனநாயகத்தின் சித்தாந்தம்.

அப்படி இருக்கும்பொழுது, இதில் ஒருவரை ஒருவர் பார்த்துப் பொறாமைப்பட என்ன இருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை.

எதையாவது கூறி, நம்முடைய வளர்ச்சியைக் கண்டு, தங்களுக்கு வந்துள்ள பொறாமையை, இப்படிப் பட்ட அர்த்தமற்ற வார்த்தைகளால் வெளியிடுகிறார்கள் என்றுதான் நாம்

எடுத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது.

இன்னொரு கூட்டத்திலே பேசும் போது, "அரசாங்கத்தை எதிர்ப்பது மனித இயற்கை. ஆகவேதான் என் அரசாங்கத்தையும் சிலர் எதிர்க்கின்றனர்!" என்று ஏதோ ராஜ பரம்பரையில் வந்துகொண்டிருப்பவர்போல இறுமாப்போடு, பெரிய மனிதத்தத்துவத்தை விளக்குவதாக நினைத்துக்கொண்டு கூறி இருக்கிறார், ஆச்சாரியார். இந்த விசித்திர வாதத்திற்கு எதிர் வாதத்தில் நாம் பழக்கப்பட்டவர்கள்.

எந்த நாட்டிலும் பழமைவிரும்பிகளின் அரசாங்கத்தை மறுமலர்ச்சி வாதிகள் எதிர்த்தேதான் இருந்திருக்கின்றனர். அவர்கள் அடைந்த அவதிகள், ஆற்றாது அழுத கண்ணீர்கள், பலிகொடுத்த உயிர்கள் எல்லாம் எழுதி முடியாதவை. மறுமலர்ச்சி வாதிகளின் வளர்ச்சியைக் கண்டு பயந்த பழமை விரும்பிகள் நாடு சுற்றி, அறியாமையில் ஆழ்ந்திருக்கும் மக்களின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டுத்தானிருக்கின்றனர். இவை சனாதனிகளின் இயற்கை குணம்; அதுவும் மத்திய ஆசியாவிலிருந்து குடியேறியவர்களின் தனிக்குணம் என்பதும் நமக்குத் தெரியும்.

பொதுவாக எல்லா வழிகளிலும் சரியான கணக்குப் போட்டுத்தான் ஆச்சாரியார் தன் போரை ஆரம்பித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் தலைவர்களை சமயம் பார்த்துச் சிறையில் தள்ளினார்.

தி. மு. க-வில் தொண்டாற்றுபவர்களை மிரட்ட முடிந்ததோ இல்லையோ, மக்களை மிரளவைக்கலாம் என்று, கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் ஆறுபிணங்களைக் குவித்துக் காண்பித்தார்.

பின்னால் நேரு ஆரம்பித்து வைக்க, தான் தன் பதவி வரிசையுடன் புறப்பட்டுவிட்டார் அறிவியக்கத்தினரை ஒடுக்க!

பாவம்! அவருக்குத் தமிழ் நாட்டுத் தொடர்பு நாலைந்து ஆண்டுகளாக, காமராசரின் குறுக்கீட்டால் இல்லாமல் போயிற்று. அதோடு வயதும் ஏறிவிட்டது. கிழவர்களுக்கு புரட்சிவாதிகளின் தத்துவங்கள் சீக்கிரத்தில் புரிவதில்லை. தாங்கள், மறைந்து கொண்டிருக்கும் பரம்பரையைச் சார்ந்தவர்கள் — வாலிபர்கள் வளர்ந்துகொண்டிருக்கும் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்—என்று தெரிவதில்லை!

ஆகவேதான் மிக புத்திசாலித்தனமாகக் கணக்குப் போடுவதாக நினைத்துக்கொண்டு, இன்று மிக ஆபத்தான பாதையில் நின்று கொண்டிருக்கிறார் கிழவர்.

அவருடைய போர்க் கணக்கிலே இரண்டு பெரிய தவறு செய்துவிட்டார் என்பதை அவர் அறியார்.

ஒன்று யாரோடு போரிடுகிறோம் என்பது.

இரண்டாவது திராவிடத்தில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள சமுதாய மாறுதல்.

ராஜகோபாலாச்சாரி தொடுத்திருக்கும் போர் நேரடியாக தி. மு. க. தலைவர்களோடு. அவர்களை மக்கள் கண் முன்னிலிருந்து மறைத்துவிட்டு, கொஞ்ச நாட்கள் தான் சுற்றுப்பயணம் செய்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும் என்று மனப்பால் குடிக்கிறார். இன்றைக்கு சிறைக்குள்ளே இருக்கும் தி. மு. க. தலைவர்கள், ஆச்சாரியார் போய் மக்களை திருப்பி விடுவாரோ என்று கவலைப்படுபவர்களுமல்ல; அப்படித் திருப்பினாலும், கொள்கையில் நம்பிக்கையில்லாதவர்களும் அல்ல.

நாடே சேர்ந்து எதிர்த்தபோது சுயமரியாதையை நெஞ்சுரத்தோடு பரப்பியவர்கள்.

ராஜாக்களும், சர்களும் மிரட்டிய போதும் அஞ்சினாரில்லை. மக்கள் மன்றத்திற்கே கட்சியை இழுத்து வந்தவர்கள்.

ஆகவே கொள்கைக்காக உழைப்பது நம் கடமை.

உழைத்தோம் — உழைப்போம், உழைத்துக்கொண்டே இருப்போம் — இல்லை சாவானாலும் சரி என்று மனோதிடமும் தன்னம்பிக்கையும் கொண்டவர்களை தவிர, எந்தவிதமான இலாபத்தையும் எதிர்நோக்கி இருப்பவர்களல்ல.

இப்படிப்பட்ட வீரர்கள் ஒருபுறமிருக்க, அரசியல் வாழ்க்கையைப் பாங்கிலே போட்டுவிட்டு வந்த முதுபெரும் அரசியல்வாதிகளைக் கூட தவறு செய்தபோது, அவர்களை ஒதுக்கித்தள்ளி, கொள்கையின் முடிவிடத்திற்கு, மக்களை அழைத்துச் செல்லும் பொதுச் செயலாளரின், திறமையும் ஆச்சாரியாரின் கணக்கில் வராதவை.

இரண்டாவதாக அவர் மறந்தது, திராவிடத்திலே சில ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்கள்.

மறுமலர்ச்சி இயக்கத்தின் சலியாத உழைப்பின் காரணமாக திராவிடத்தில், குறிப்பாக தமிழகத்தில், இனிவர்ணாச்சிரமங்களின் வார்த்தை ஒருநாளும் செல்லுபடியாகாது.

ஆகவேதான், ஆச்சாரியாரின் பவனியைக் கண்டு, நமக்குச் சில இலாபக் கணக்குகள் தெரிகின்றன.

ஜூலை போராட்டத்திலே, கிட்டத்தட்ட ஐயாயிரம் தொண்டர்களை, நல்ல பயிற்சி கொடுத்து, தி. மு. க. பாசறைக்கு அனுப்பியிருக்கிறார், ஆச்சாரியார்.

இப்பொழுது, நமக்கு வேலை தராமலே, நாடெங்கும் சென்று, தன் சுயரூபத்தை காட்டிவருகிறார்.

நம்மை அலட்சியப்படுத்த நினைத்த தேசியத் தோழர்கள், நம்மை எதிரி நெ. 1 என்றால் என்ன அர்த்தம்?

நம்மைப்பற்றி பொதுக்கூட்டத்தில் பேசுவதே தேவையில்லை என்று நினைத்த தேசியம், இன்று, ஆசிய ஜோதியைத் துணைக்கழைக்கிறது என்றால், என்ன பொருள்?

அரசியலில் ஒரு பெரிய கட்சி, மற்றதைப் பார்த்து இந்தக் கட்சி தான் நம் எதிரி என்றால் என்ன அர்த்தம்? பெரிய கட்சி நம்மை ஒழிக்க நேரடியாக புறப்படுமளவு நாம் வளர்ந்திருக்கிறோம் என்று தான் பொருள்.

திராவிடத்தின் விடுதலை நாள் நெருங்குகிறது!

வைதீகமும் முதலாளித்துவமும் தன் முடிவுக்கு வேகமாக வந்து கொண்டிருக்கிறது.

"உரிமை! உரிமை!!" என்று கத்திய வண்ணம் அவர்கள் கத்தினர். கத்திக்கொண்டே உரிமையை யடைய தங்கள் எலும்புகளால் பாலம் அமைத்தனர்!" என்று பழம் பெரும் வாக்கியம் ஒன்றுண்டு.

தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் ரத்தம் சிந்திய மாவீரர்களை நினைக்கும்போது அந்த பழமொழியின் ஞாபகம் தான் வருகிறது. ஆகவேதான், ஆச்சாரியாரின் போர் முறை நம்முடைய பாலத்தைச் சீக்கிரம் உருவாக்கும் என்ற நம்பிக்கை உருவாகிறது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பனரல்லாத மக்களின் நலனுக்காகப் பிரச்சார வாயிலாகவன்றிச், சட்டவாயிலாகச் செய்யப்பட வேண்டியிருந்த வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் போன்ற திட்டங்களை நாம் மனப்பூர்வமாக ஆதரித்து வந்திருக்கிறோம்.

அந்த ஸ்தாபனத்தின் ஆரம்பத் தலைவர்கள் மறைந்து, அந்த ஸ்தாபனம் ஜஸ்டிஸ் கட்சி என்று அழைக்கப்பட்டு, அதில், தென்னாட்டிலுள்ள பிரபு நிலையில் இருப்பவர்கள் இடம் பெற்று, பட்டம் பதவியே அந்த ஸ்தாபனத்தின் குறிக்கோள் என்ற பரிதவிக்கத்தக்க நிலை ஏற்பட்டதும், நாம் அந்த ஸ்தாபனத்தின் தொடர் அறுத்துக்கொண்டு, சமுதாய — பொருளாதார சமத்துவ — அரசியல் முன்னேற்றம் ஒன்றுதான் திராவிட மக்களுக்குரிய ஒரு தனிக் கொள்கை என்ற அடிப்படையில் "திராவிடர் கழகம்" என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்திப் பணிபுரிந்து கொண்டு வந்தோம். பின்னர், தன்மானக்கொள்கைகளைச்சிலர் தவறான வழியில் பயன் படுத்தப்படுவதைக் கண்டு, அதனின்றும், விலகித் தனியாகத் திராவிட முன்னேற்றக்கழகம் என்ற பெயரோடு திராவிட மக்களின் நலனுக்காகப் பணி புரிந்து வருகிறோம். இப்படிப்பட்ட நிலையிலுள்ள நாம் எந்தக் காலத்திலும் வெள்ளையன் ஆட்சியை ஆதரித்ததே கிடையாது. தென் இந்திய நல உரிமைச் சங்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டது வரையில், எந்தக் காலத்திலும், வெள்ளையன் ஆட்சி இங்கு நீடிக்க வேண்டுமென்று நினைத்ததே இல்லை. அதே சமயத்தில், வெள்ளையர் இந் நாட்டுக்காகச் செய்த சில நல்லகாரியங்களைப் பாராட்டிக், கெட்ட காரியங்களைக் கண்டிக்காமல் இருந்ததும் இல்லை. எப்படி, இப்போது காங்கிரஸ் சர்க்கார் செய்கிற நல்ல காரியங்களை ஆதரித்துக், கெட்ட காரியங்கள் செய்தால் அவற்றைக் கண்டிக்கிறோமோ, அப்படியேதான் வெள்ளையன் ஆட்சியிலும் நாம் நம்முடைய கருத்தைத் தெரிவித்து வந்திருக்கிறோம்.

காங்கிரஸ் சர்க்காருக்கும். பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இடையே நாம் காணும் வித்யாசம் ஒன்றே ஒன்று தான். பிரிட்டிஷ் சர்க்கார், சர்வாதிகாரம் என்ற பெயரால், ஒவ்வோர் சமயங்களில் ஜனநாயகத்தை மதித்து நடந்து வந்திருக்கிறது என்பதையும், காங்கிரஸ் சர்க்கார் ஜனநாயகம் என்றபெயரால் சர்வாதிகாரத்துக்கு மதிப்புக் கொடுத்து அதன்படி நடந்து வருகிற என்பதையும் தவிர, வேறு எந்த விதமான வித்யாசமும் அந்த இரண்டு சர்க்கார்களுக்குமிடையே கிடையாது என்று கூறி, அந்தச் சர்வாதிகாரப் போக்கு மாற வேண்டுமென்று பாடுபடுபவர்கள் நாம். மற்றப்படி, காங்கிரஸ் தலைவர்கள் தப்புக் கணக்குப் போட்டு, நம்மைத் தவறாகப் 'பதவி ஆசைபிடித்தவர்கள்'—'அரசியலைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்பவர்கள்' என்று கூறும் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களல்ல என்பது இப்போது காங்கிரஸ் தோழர்களுக்குத் தெரியாவிட்டாலும், போகப் போக, எங்கள் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்துக் கொண்டு வந்தால் நன்கு புலனாகும்.

நமக்குப் பட்டத்தில் மோகமும், பதவியில் ஆசையும் இருந்தால், நாம் ஆதரித்து வந்த ஜஸ்டிஸ் கட்சியைக் கைகழுவி விட்டிருக்க மாட்டோம்.

பதவி—இது பாடு பட்டுப் பெறக் கூடிய ஒன்றல்ல.

ஒருவன் தன் நாட்டுக்காகச் செய்கின்ற நல்ல காரியங்கள், அவன் அறியாமலேயே, அவனைப் பதவியில் உட்காரும்படி செய்து விடுகின்றன. அப்போது, அவன், பதவி வேண்டாமென்று சொன்னாலும், பதவி, அவனை விட்டுவிடாது.

அந்த நிலை ஏற்பட்டால் — ஏற்படுத்தப்பட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தாராகியநாம் பதவி வேண்டாமென்று உதறித் தள்ளிவிட முடியாது. இதனையும் காங்கிரஸ் தோழர்கள் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பதவி நம்மை நாடி வரமுடியாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு இப்பொழுது காங்கிரஸ் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

இதனை அவர்கள் நிறைவேற்றி வைப்பார்கள் என்ற நம்பிக்கையை நாம் இன்னும் இழக்கவில்லை.

காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டை ஆளக் கூடாதென்று நாம் எந்தக் காலத்திலும் கூறியது கிடையாது.

அவர்கள், நாட்டை ஆளும் முறையில் ஆட்சிபுரிகின்றனரா அல்லது தவறான பாதையில் செல்கின்றனரா என்பதைக் கண்காணித்துக், தவறும் பொழுது தட்டிக் கேட்பவர்களேயொழிய, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற கருத்தோடு காரியமாற்றுபவர்களல்ல நாம்.

நமக்கு அந்தச் சிரமம் வேண்டாம் — சிரமப்படுபவர்களுக்குச் சிரத்தை காட்டினால் போதுமென்றிருப்பவர்கள் நாம்.

*

காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறமாகத் தெரிவது போல், நாம் செய்கின்ற எந்தக் காரியமும், காங்கிரஸ் தலைவர்களிலிருந்து—தொண்டர்கள் வரை எல்லோருக்குமே 'துவேஷ'மாகத் தெரிகிறது. காரணம், அவர்கள் கண்ணாடி வீட்டில் இருப்பதுதான்.

கண்ணாடி வீட்டுக்குள் இருப்பவனை வெளியே இருப்பவன் நன்றாகப் பார்க்கிறான். அவன் எப்படிப் பட்டவன் என்பதை எளிதாகப் புரிந்துகொள்கிறான். நல்லவன் என்று தெரிந்தால், அப்படிப்பட்ட ஒரு நல்லவன் எந்த நேரத்தில் ஆபத்து ஏற்படுமோ என்ற ஏக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும் கண்ணாடி வீட்டில் இருப்பது நல்லதல்ல — வேறு வீடுபார்த்துக் கொள்ளும்படி பச்சாதாபத்தோடு நல்லறிவு புகட்டுவான். கெட்டவன் என்று தெரிந்தால், 'எக்கேடாவது கெட்டுப்போகிறான் நமக்கென்ன' என்று சிலரும், கெட்டவனுக்குப் பாடம் கற்பிக்கவேண்டுமென்று கருதிக் கண்ணாடி வீட்டில் கல்லெறிபவர்கள் சிலரும், இவனோ கெட்டவன் — கெட்டவனுக்குக் கிடைத்தது கண்ணாடி வீடுதானோ என்று கவலைப்படுபவர் சிலரும் இருக்கத்தான் செய்வார்கள்.

ஆனால், கண்ணாடி வீட்டில் இருப்பவனுக்கு மட்டும், வெளியே உலவுபவர்கள் யாரைக் கண்டாலும், அவர்கள் தன்னுடைய வீட்டின் மீது கல்வீசிவிடுவார்களோ என்ற பயம்தான் உண்டாகும். இது

இயற்கைதான், என்றபோதிலும், சதா சர்வகாலமும் அச்சத்தையே அணைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், வீட்டை மாற்றிக் கொள்ளலாம்—அல்லது அதனையே நல்ல முறையில் ரிப்பேர் செய்து, குடியிருக்கலாம். வீட்டை மாற்றிக் கொள்வதென்பது, இப்போதுள்ள சூழ்நிலையில் முடியாத காரியமாக ஒரு வேளை தெரிந்தால், கண்ணாடியைக் களைந்துவிட்டுக் கற்சுவர் எழுப்பிக்கொண்டு கலக்கமின்றிக் குடியிருக்கலாம். இதனை நாம் வேண்டாமென்று சொல்லவில்லை—மாறாக, விரும்பவே செய்கிறோம். நீயே அந்த வீட்டில் குடியிருக்க வேண்டுமென்று உள்ளபடியே விரும்புபவர்கள் நாம். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்.

நிர்வாகத்தை மாற்றியமை! திறமைசாலிகளைக்கொண்டு நிர்வாக யந்திரத்தை ஓட்டும்படி செய்! கண்ணாடியை அகற்று — கற்சுவரை எழுப்பு! ஆதரவு அமோகமாகக் கிடைக்கும். அணுவளவும் சந்தேகம் வேண்டாம்.

இதைவிட்டு, வறிதே பகைமையை உண்டாக்கும் பாதகங்களைச் செய்வது அறிவுடைமையாகாது,

*

வெள்ளையன் வெளியேறவேண்டுமென்று கூறியதில் காங்கிரஸ்காரர்களுக்குச் சளைத்தவர்களல்ல நாம்.

"ஆகஸ்டு 15" எழுதி வருவோர் ரோம. அத்வகையவரின் தலைமையில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்குகிறது என்பதும் காங்கிரஸ் தலைவர்களிலிருந்து தொண்டர்கள்வரை எல்லோருக்குமே தெரியும்.

தெரிந்தும், நம்மையும், பிரிட்டிஷார் இந்நாட்டைவிட்டு வெளியேறக்கூடாதென்று கூறியவர்களின் பட்டியலில் சேர்த்துப் பேசும் ஆச்சாரியாரின் போக்கைக் காணும் போது அவர்பால் நமக்குப் பரிதாபமே ஏற்படுகிறது.

தன்னுடைய பதவி காப்பாற்றப் படவேண்டுமென்பதற்காக மனுஷன் எதையெதையோ உளறிக் கொட்டுகிறாரே என்ற பச்சாதாபமே நமக்கு உண்டாகிறது.

*

வெள்ளையன் வெளியேறி இந்நாடு விடுதலையடைந்ததும்,

",,நாட்டுமக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையுமாகிய, சுயராச்சியத்துக்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின் படி நடந்து, அதனால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை, சிறைவாசத்தை, தீவாந்திரசிட்சையை, தூக்கு மேடையைக்கூட மனமுவந்து ஏற்றுக்கொண்ட தியாகிகளுக்கு, வீரத்தை, தியாகத்தை, கொண்டகோள்கைக்காக கஷ்டநஷ்டம் ஏற்கவேண்டுமென்ற கோட்பாட்டை மதிக்கும் திராவிடர் கழகத்தாராகிய நாம், வீர வணக்கம் செலுத்தவேண்டும்"

என்று எழுதுவதன் வாயிலாக எங்கள் உள்ளக் கிடக்கை எது என்பதை உலகுக்கு அறிவித்திருக்கிறோம்.

ஆகஸ்ட்டு 15-ந்தேதி, இரண்டு நூற்றாண்டுகளாக இந்தத் துணைக் கண்டத்தின்மீது இருந்து வந்த பழிச் சொல்லை, இழிவை நீக்கும் நாள், அது திராவிடருக்கும் திருநாள்தான்—துக்க நாளாகாது.

என்ற இவ்வளவு துணிவோடு, தம் கருத்தில் எது நியாயம் என்று படுகிறதோ அதை தயக்கமின்றித் தாம் ஒப்புக்கொள்வது மட்டுமின்றி பிறருக்கும் அதனை வலியுறுத்தும் பண்பைப்பெற்றவர் யாரோ, அவருடைய தலைமையில்தான் இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் இயங்குகிறதென்பதை ஆச்சாரியாரும் அவர்தம் சகாக்களும் அறிந்திருந்தும், நம்மைப் பொறுமைக்காரர்கள் என்றும், பிரிட்டிஷார் ஆட்சிப் பொறுப்பை தங்களிடம் ஒப்படைக்காததால் ஏமாற்றம் அடைந்தவர்கள் என்றும், அதன் காரணமாக எப்படியாவது காங்கிரஸ் சர்க்காரை ஒழித்துக் கட்டுவதுதான் இவர்கள் வேலை என்றும், நெஞ்சில் கை வைத்துப் பாராமல், சுடுமொழி பேசிவரும் இந்தமுதியவரின் போக்கைக் காணப் பெரிதும் வருந்துகிறோம்.

நம்மிடமும் அகராதி இருக்கிறது எந்தெந்த சொற்களை, எப்படி எப்படி எடுத்து பயன் படுத்தலாம் என்ற முறையும் தெரியும். ஆனால், நாங்கள் ஆச்சாரியார் கூறுவது போல் "அந்தக் காலத்து ஜஸ்டிஸ் காரர்கள் மிகவும் நல்லவர்கள், பிரிட்டிஷ்காரரிடம் பயிற்சி பெற்றவர்கள். வார்த்தைகளைக்கூட அளந்துதான் பேசுவார்கள்." என்ற அவசியமற்ற புகழுரைக்கு இலக்காகமாட்டோம். நாங்கள் எந்தக் காலத்திலும் வார்த்தைகளை அளந்து பேசமாட்டோம் — வார்த்தைகளை அறிந்தே பேசுவோம். அறிந்து பேசுவதில பயிற்சி பெற்றவர்கள் நாம்.

வார்த்தைகளை அளந்து பேசுபவர்கள் தங்களுக்கிருக்கும் அச்சத்தின் காரணமாக, வார்த்தைகளின் அளவைக் கூட்டியும் குறைத்தும் பேசுபவர்கள். நாம் அப்படியல்ல — வார்த்தைகளைப் பயன் படுத்தும் இடம், காலமறிந்து, அந்த வார்த்தைகளை அளவாமல்—அளப்பதின் வாயிலாக அவற்றைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யாமல், வார்த்தைகளை அப்படியப்படியே பயன் படுத்திப் பேசுபவர்கள். எனவே, அப்படிப்பட்டவர்களின் வழிவந்தவர்கள் நாமென்று கூறி, நம்மையும் அவர்களுடைய பட்டியலில் சேர்க்கப் பார்ப்பது மன்னிக்கமுடியாத குற்றமாகும், இப்பொழுதிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தினர் பெரும்பாலோருக்கு, ஜஸ்டிஸ்கட்சி என்பது என்ன? அது எதற்காக இந்த நாட்டில் இருந்தது என்பதே தெரியாது—அன்றைய நிலை வேறு—இன்றைய நிலை வேறு. எனவே, நம் மீது தவறான கருத்துக்களைச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் ஆச்சாரியாரும, அவர்தம் சகாக்களும் தங்களுடைய ஓய்வு நேரங்களிலாவது நம்முடைய வ[...] லாறு என்ன? நாம் எதற்கா[...] உழைக்கிறோம் என்பதை அறி[...] முயலவேண்டும் என்ற அன்பு வி[...] ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறோம் அச்சத்தால் இவ்விதம் கூறவில்லை நமக்கு இருக்கும் இயற்கையா[...] நல்ல பண்பின் காரணமாக, நம[...] குள் ஒருவரோடொருவர் பகைத்து[...] கொள்வதுகூடாதென்பதைத் தவி[...] வேறு உள் எண்ணம் எதுவு[...] இல்லை என்பதை விளக்கவே, இ[...] னைக் கூறுகிறோம்.

★

'அவர்' விசாரம்

[சம்பந்தன்]

"வகுப்புவாதம் கூடாது!"

"வகுப்புவாதத்தை வளரவிடக் கூடாது!"

"வகுப்புவாதத்தை வேரோடு களைய வேண்டும்!"

"வகுப்புவாதிகளை விட்டுவைக்கக் கூடாது!"

இவ்வண்ணம், காங்கிரஸ் தலைவர் நேரு முதல், காங்கிரசின் கடைசி ஆட்கள் வரை, சந்தர்ப்பம் நேரா விட்டாலும், சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொண்டு சொல்லத் தவறுவதில்லை.

'வகுப்புவாதத்தை வேரோடு களைய வேண்டும்' என்று வீர முழக்கமிடும் விவேகிகள், வகுப்புவாதத்தின் வேர் எங்கே இருக்கிறது என்பதை இதுவரை கண்டறியும் காரியத்தில் இறங்கவில்லை.

வேர் ஊன்றியிருக்கும் இடத்தை சிலர் அறிந்தாலும் கூட, அதை விளக்கிக் கூறத் திணறுகிறார்கள்— வாய்மூடி மௌனியாகி விடுகிறார்கள். காரணம், 'நமக்கேன் இந்த வேலை' என்று காலத்தைக் கடத்துகிறார்கள்—சிலர்; வேறுசிலரோ தம்விக்குத் தீங்கு நேருமோ எனத் திகைத்து நிற்கிறார்கள்.

எனவேதான், வகுப்புவாதத்தை வேரோடு களையவேண்டும் என்ற வாய் வேதாந்தத்தோடு, காலங் கழித்து வருகிறார்கள்.

வகுப்புவாதத்தைத் தோற்றுவித்தவர்களும், வகுப்பு வாதத்தை வளர்ப்பவர்களும், வகுப்புவாதம் வீழ்ந்து விட்டால் தங்கள் வாழ்வே வீழ்ந்துவிடும் என்ற உண்மையை உணர்ந்தவர்களும் விப்பிரர்கள்தான் என்று, நாம் பன்முறை கூறி வந்திருக்கிறோம்.

இந்தச் சமுதாயத்திலே மட்டுந்தானே, ஒரு வகுப்பு, அந்த நாள் தொட்டு, இந்த நாள் வரை, அத்திரி, அகத்தியர் காலந்தொட்டு, ஆச்சாரி சாஸ்திரி காலம்வரையிலே, மற்ற வகுப்பினரை 'இழி மக்கள்' எனக் கூறி அந்தப்படியே நடத்திவரக் கண்டும், அதன் கொடுமை ஏககாலத்திலே எண்ணாயிரம் ஈட்டிகள் குத்துவது போன்று இருக்கக் கண்டும், உலக நாகரிகம், அறிவின் வளர்ச்சி, மனிதத் தன்மையின் மேம்பாடு, உலக நிகழ்ச்சி எனும் அறிவுச் சுடர்கள் அனேகம் வீசியும், நீங்காது குறையாது குன்றாது நிலைத்திருக்கக் கண்டும், புரட்சிப் பொறிகள் கிளம்பாது, இருக்கும் நிலை உள்ளது. எங்கேனும் எவரேனும் புரட்சிப் பொறிகளைக் கிளப்பினால், அதனை அணைக்க பலர் வருகின்றனர்.

குடிகாரனைக் குடிகாரன் என்று கூறினால், கூறுபவனையே, 'நீதான் குடிகாரன்' என்று சற்றும் யோசியாமல் கூறி விடுவான்—கூறுபவனைக் கொடுமைகள் செய்யத் துணிவான்.

அதைப் போல, வகுப்புவாதத்தின் வித்துக்கள், நம்மையே வகுப்புவாதிகள் என்று வாய் கூசாமல் கூறத் தலைப்பட்டன. அதற்கு விபீஷணப் பட்டாளங்களும், வானர வீரர்களும் (ஆச்சாரியார் கூறுவதைப் போல, வாலில்லாமல்) தாளம் கொட்டுகின்றன. தங்கள்— நிலையினை உணராமல்.

அப்படி, வகுப்புவாதம் இங்குதான் முளைக்கிறது என்று காங்கிரஸ் தோழர்கள் அறிந்து கொண்டாலும், அதை வெட்ட வெளிச்சமாகக் கூற அஞ்சுகிறார்கள்.

"படிப்பில்லாத சாதாரண மக்களிடம் வகுப்புவாதம் கிடையாது.

"படித்தவர்கள்தான்; இந்த வேற்றுமைகளையெல்லாம் வளர்த்துவிட்டு, தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்"

வகுப்புவாதம் எங்கே உண்டாகிறது — அதை வளர்த்துவிட்டு, யார் அதை தங்கள் சுயநலத்துக்குப் பயன் படுத்திக்கொள்கிறார்கள் என்பதை மேலே உள்ள வாசகம் நன்கு புலப்படுத்துகிறது.

இந்த உண்மையை, இன்றுதான் அறிந்து வெளியிட்டவர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் தோழர் காமராசர் ஆவார். சேலம், காங்கிரஸ் மகாநாட்டிலே, அவர், இவ்விதம் கூறியுள்ளார்.

வகுப்புவாதம் எங்கேஇருக்கிறது

பொதுச்செயலாளர் விடுத்த செய்தி

[பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோரை, பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. சிறையில் சந்திப் பேசியபோது, தி. மு. க. தோழர்களுக்கு பொதுச் செயலாளர், பொறுப்பாளர் மூலம் விடுத்த செய்தி இங்கு தரப்படுகிறது.]

*

'நாங்கள் சிறையில் இருக்கின்ற சமயத்தில், நம் இயக்கத் தோழர்கள், பல தொல்லைகளுக்கும் தாக்குதல்களுக்கும் ஆளாகி வருகின்ற செய்தி அறிந்து வருந்துகிறேன்.

"அதே சமயத்தில், நம் தோழர்களின் கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், அமைதி முதலியவைகளினின்றும், வழுவாமல் இருப்பதைக் கேட்டு மகிழ்கிறேன்.

'சில காங்கிரஸ்காரர்கள், அமைதிக்குப் பங்கம் விளைவித்து, ஆத்திரமூட்டும் வகையில் .பேசினாலும் பொறுமையை இழந்துவிடாமல். அமைதியாக இருக்கும்படியும், தோழர்கள் கடமை உணர்ந்து பணியாற்ற வேண்டும் எனவும்கேட்டுக் கொள்கிறேன்."

என்பதைக் கூறவந்தவர், வகுப்புவாதம் எங்கே கிடையாதுஎன்பதை முதலில் எடுத்துக் கூறியிருப்பதன் காரணம் என்ன?

இதுவரையிலே, வகுப்புவாதம், படிப்பில்லாத சாதாரண மக்களிடம் இருந்து தோன்றுகிறது என எண்ணிக்கொண்டிருந்தேன் – அது தவறு; வகுப்புவாதம் சாதாரண மக்களிடம் கிடையாது! என்பதை உணர்ந்துகொண்டேன் — இதை அறிவுறுத்துவதன் நோக்கமாகவே, வகுப்புவாதம், தான் எண்ணிக்கொண்டிருந்த சாதாரண மக்களிடம் இல்லை என்று முதலில் கூறியிருக்கிறார்.

"படித்தவர்தான், இந்த வேற்றுமைகளையெல்லாம் வளர்த்திவிட்டு, தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்"—என்ற உண்மையைத் தெரிந்துகொண்டேன் என அடுத்தபடி கூறுகிறார்.

சந்தேகத்திற்குத் துளியும் இடமில்லை என்பதற்காக, 'படித்தவர்கள்தான்' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

படித்தவர்கள்தான் — என்று கூறியவர், யார் படித்தவர்கள் என்பதை விளக்கவில்லை—தெரியாததால் அல்ல—விளக்கம் கூறினால், அவரும் 'காட்டுமிராண்டிகள்' பட்டியலிலே சேர்க்கப்பட்டுவிடுவார்—இன்றைய காங்கிரஸ் தலைவர் நேரு போன்றவர்களால். அதனால்தான், படித்தவர்கள்தான் என்று கூறியதோடு நிறுத்திக் கொண்டார்.

நம்நாட்டில், சமுதாயத்தில் நூற்றுக்கு மூவராக ஆரியர்கள் இருந்தாலும், நூற்றுக்கு நூறு ஆரிய இனம் படித்திருக்கிறது என்பது காமராசருக்குத் தெரியாத உண்மையுமல்ல.

தோழர்கள் காமராசரும் உபயதுல்லாவுமா :படித்தவர்கள்—இல்லை, இல்லை. படித்தவர்கள் பார்ப்பனர்கள்தான் என்பதை தோழர் காமராசர் அறியாமலில்லை.

எனவேதான், இந்த வாசகத்தை வகுப்புவாதிகளின் வித்தாகிய தோழர் ஆச்சாரியார் முன்னாலேயே தோழர் காமராசர் கூறியிருக்கிறார்.

திருப்பரங்குன்றத்திலே சிதறிய பொறி, திருமங்கலத்திலே பற்றி எரிய ஆரம்பித்து, மதுரையிலே கொழுந்துவிட்டு எரிந்தது. அதை சென்னையில், நேருஜி அணைக்க வந்தார். என்றாலும், அது சேலத்திலே மீண்டும் பற்றி எரிய ஆரம்பித்திருக்கிறது.

அந்தக் காட்சிதான், தோழர் காமராசர், அன்பர் ஆச்சாரியாரின் முன்னாலேயே, படித்தவர்கள்தான் இந்த வேற்றுமைகளை வளர்த்துவிட்டு, தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று கூறியது.

பயன்படுத்திக்கொண்டார்கள் என்று கூறவில்லை — பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று கூறுகிறார் — இன்றும் வகுப்புவாதத்தை அடிப்படையாகக்கொண்டு வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்த காமராசர்.

வகுப்புவாதத்தை, தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று விசாரத்தோடு விளம்பும் விருதுநகர் வீரர், இந்தச் சுயநலச் சோம்பேறிகள் இவர்கள்தான் என்று, ஏன் மக்களிடம் கூறக்கூடாது?

விசாரப்பட்டால் போதுமா? அதைக் களைந்தெறிய கவனம் செலுத்தவேண்டாமா? அந்தச் சுயநலமிகள் இவர்கள்தான் என்று மக்கள் மன்றத்தில் நிறுத்தவேண்டாமா? மர்மமாக, 'படித்தவர்கள்தான்' என்று மூடிப் பேசுவானேன்.

உண்மையிலேயே, தோழர் காமராசருக்கு வகுப்புவாதத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணமிருக்குமானால், அந்தச் சுயநலமிகளின் போக்கை, தாமதமின்றி ஒழித்துக் கட்டவேண்டும். ஒழித்துக் கட்டுபவர்களுக்கு வழிவிட்டாவது விலகி நிற்க வேண்டும். குற்றவாளிகள் இவர்கள்தான் எனத் தெரிந்த பிறகும்கூட, தோழர் காமராசர், குமுறுவதைத் தவிர வேறு வழியில்லாதவர்போல் விழிப்பதேன்? விசாரப்படுவதேன்?

படித்தவர்கள்தான் எனக் கூறிய காமராசர், ஏன் பட்டியல் தரப் பயப்படுகிறார்? பயப்படுவதின் காரணம் என்ன?

பார்ப்பனர்கள்தான் நூற்றுக்கு நூறு படித்தவர்கள், அவர்கள்தான் வகுப்புவாதத்தை வளர்த்துவிட்டு, தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று கூற, ஏன் காமராசர் தயங்குகிறார்?

காங்கிரசின் தலைமைப் பதவி போய்விடுமே — என்ற கவலையா? பார்ப்பன விரோதி என்று பறைசாற்றிவிடுவார்களே என்ற பயமா? அல்லது ஒரு பெரிய சமுதாயத்தையே வீழ்த்தி, வகுப்புவாத விஷநோயைப் பரப்பி வயிறுவளர்ப்பவர்களிடம் நம் எதிர்ப்பு என்ன சாதித்துவிட முடியும் என்ற விசாரமா?

விசாரப்பட்டுக்கொண்டு, விஷநோய் பரவுவதைப் பார்த்துக் கொண்டிருப்பது விவேகமல்ல என்பதை தோழர் காமராசருக்கு நாம் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

களவு நடைபெறுவதைக் கண்டிருந்தும், கள்வனைப் பிடியாத காவற்காரனை—கள்வனுக்கு உடந்தையாளன் எனக் கூறத்தானேவேண்டும்!

வகுப்புவாதத்தை வளரவிட்டு, வயிறு வளர்ப்பவர்கள் இவர்கள் எனத் தெரிந்திருந்தும் வாய்மூடி மௌனியாகி இருந்தால், இவரும் வகுப்புவாதிகள் பட்டியலில் அல்லவோ சேர்க்கப்படுவார்.

ஆனால், தோழர் காமராசர் விசாரப்படுவதின் நோக்கம்—அந்த நோக்கத்தை சேலம் மாநாட்டில், காங்கிரஸ் மாநாட்டில், ஆச்சாரியார் முன்னாலேயே கூறியதன் நோக்கம்—'இதோ வகுப்புவாதிகளின் தலைவர் இருக்கிறார், இவர்தான் வகுப்புவாதத்தை வளரவிடுகிறார், காங்கிரஸ் தோழர்களே, இதற்கு என்ன வழி கூறுகிறீர்கள், என்று கேட்பதாகவே அமைந்திருக்கிறது.

விசாரப்படும் விருதுநகர் வீரருக்குக் காங்கிரஸ் தோழர்கள் எந்த வழியைக் காட்டப்போகிறார்களோ?

அவர்களும், விசாரத்தில் மூழ்காமல், வகுப்புவாதத்தை வளரவிடாமல், அதனால் தங்கள் சுயநலத்தைப் பயன்படுத்திக் கொள்பவர்களின் போக்கை வேரோடு களையும் வழி வகையினைச் செய்து, விருதுநகர் வீரரின் விசாரத்தைப் போக்குவார்களா?

*

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
35, Tirukkachinambi St., Kancheepuram.